Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 12

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 203

சனிக்கிழமை 17 ஜூன் 2023




## வெலிஓயா பகுதி மக்கள் முல்லைக்குள் உள்ளீர்ப்பு

முல்லைத்தீவு, ஜூன் 17
முல்லைத்தீவு மாவட்டத்தின் வெலிஓயா என்று அழைக்கப்படும் மணலாறு பிரதேச செயலகத்துக்குட்பட்ட பெரும்பான்மையின மக்கள் இனிவரும் »11

519 சுற்றுலாவிகளுடன்

## காங்கேசன்துறையை நேற்று வந்தடைந்தது சொகுசுக்கப்பல்

நேற்று மாலையே சென்னைக்குத் திரும்பியது

யாழ்ப்பாணம், ஜூன் 17
சென்னையிலிருந்து புறப்பட்ட சொகுசுக் கப்பல் அம்பாந்தோட்டை துறைமுகம், திருகோணமலைத் துறைமுகத்தைத் தொடர்ந்து காங்கேசன்துறைத் துறைமுகத்தை நேற்றுக் காலை வந்தடைந்தது. காங்கேசன்துறை துறைமுகத்துக்கு முதலாவதாக வருகை தந்த பயணிகள் கப்பலாகவும் இது பதி »11



காங்கேசன் - காரைக்கால்

# பயணிகள் கப்பல்சேவை இப்போதைக்கு இல்லை

அமைச்சர் நிமால் கைவிரிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 17
காரைக்காலுக்கும் காங்கேசன்துறைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவையை இந்த ஆண்டுக்குள் ஆரம்பிப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்று விமான சேவைகள் மற்றும் கப்பல் துறை அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார். »11

பேராதனை, ஜெயவர்த்தனபுர பல்கலைகளில்

## யாழ். மாணவர்கள் இருவர் சடலங்களாக நேற்று மீட்பு

*மாணவர்களிடையே பெரும் அதிர்ச்சி*


ந.குகதீஸ்

யாழ்ப்பாணம், ஜூன் 17
பேராதனை மற்றும் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகங்களில் பயிலும், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த, பொறியியல் பீட மாணவர்கள் இருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலங்க »11


அபிநஜன்



## வவுனியாவில் கோரவிபத்து தாய், மகள் நசுங்கிப் பலி!

*பாடசாலை செல்வதற்காகக் காத்திருந்தபோதே விபரீதம்*

வவுனியா, ஜூன் 17
வவுனியாவில் நேற்று இடம்பெற்ற கோரவிபத்தில் தாயும் மகளும் உடல் நசுங்கிப் பலியாகினர். பாடசாலைக்குச் செல்வதற்காகக் காத்திருந்த சிறுமியும், அந்தச் சிறுமியை »10

## வயோதிபப் பெண் விபத்தில் இறப்பு!

வவுனியா, ஜூன் 17
வவுனியாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்தில் வயோதிபப் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார். முருகேசு விக்னேஸ்வரி (வயது-61) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். ஓட்டோவொன்றை வாடகைக்கு அமர்த்திய »11

## மின்கட்டணத்தில் மாற்றம் இல்லை

கொழும்பு, ஜூன் 17
மின்கட்டணம் 3 சதவீதத்தால் குறைக்கப்படும் என்ற கருத்துகள் பரவலாக வெளிவந்த நிலையில், தற்போது அறிவிடப்படும் மின்கட்டணமே தொடர்ந்து நடைமுறையிலிருக்கும் என மின் »10

பலாலி விமான நிலையத்தில்

## கடல் பக்கமாகவே ஓடுபாதை விரிவாக்கம்

யாழ்ப்பாணம், ஜூன் 17
பலாலியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் ஓடுபாதையை வடக்காக - கடல் பக்கமாக விரிவாக்குவதற்கு நேற்று இணக்கம் காணப்பட்டுள்ளது. »11

## அநுராதபுர எல்லைக் குடியிருப்புகள் வவுனியா மாவட்டத்துடன் இணைப்பு!

வவுனியா, ஜூன் 17
வவுனியா வடக்கின் எல்லைப் பகுதிகளில் (அநுராதபுரத்தில்) குடியேற்றம் செய்யப்பட்ட சிங்களக் கிராமங்கள் சிலவற்றை, வவுனியா மாவட்டத்தின் நிர்வாகத்துக்குள் உள்ளெடுப்பதற்காக அவதானம் செலுத்துமாறு, தேசிய எல்லை நிர்ணயக் குழுவால் வவுனியா மாவட்ட நிர்வாகத்துக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. »10

இனப்படுகொலைக் குற்றச்சாட்டு

## கனடாவுக்கு எதிராக கடும் நிலைப்பாடாம்

கொழும்பு, ஜூன் 17
இலங்கை இராணுவத்தின் உறுப்பினர்கள் மீது விதிக்கப்பட்டுள்ள சர்வதேச பயணத் தடை மற்றும் கனேடியப் பிரதமரின் இனப்படுகொலை தொடர்பான பொய்க் குற்றச்சாட்டுகளுக்கு எதிராகக் கடுமையான நிலைப்பாட்டுக்கு, »10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வணிகபீடத்தின் மோதலின் எதிரொலி: 3 மாணவர்களுக்கு தொடர்ந்து தடை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தில் ஏற்பட்ட குழு மோதல் சம்பவத்தின் அடிப்படையில் உள் நுழைவுத் தடை விதிக்கப்பட்டிருந்த மாணவர்களில் 28 பேர் மீதான தடை, பூர்வாங்க விசாரணைகளின் முடிவில் நீக்கப்பட்டுள்ளதுடன், அடையாளப்படுத்தப்பட்ட 3 மாணவர்கள் மீது தொடர்ந்து நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீட மாணவர்களின் 'மாகோஸ்' வார நிகழ்வுகளின்போது ஏற்பட்ட மோதலில் இரண்டாம் வருட மாணவர்கள் 16 பேருக்கும், மூன்றாம் வருட மாணவர்கள் 15 பேருக்கும் தடை விதிக்கப்பட்டிருந்தது.

பூர்வாங்க விசாரணைகள் கடந்த வாரம் இடம்பெற்றன. விசாரணைகளின் முடிவில் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என அடையாளப்படுத்தப்பட்ட இரண்டாம் வருட இரண்டாம் அரையாண்டு மாணவர்கள் 3 பேரைத் தவிர ஏனைய 28 பேர் மீது விதிக்கப்பட்டிருந்த உள் நுழைவுத் தடை விலக்கப்பட்டுள்ளது என்று முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடாதிபதி பேராசிரியர் பா. நிமலதாசன் அறிவித்துள்ளார்.

பூர்வாங்க விசாரணைகளின்போது அடையாளப்படுத்தப்பட்ட மாணவர்கள் பல்கலைக்கழக மாணவர் வதிவிடம் மற்றும் ஒழுக்கம் தொடர்பான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு விதிமுறைகளுக்கமைவாகப் பல்கலைக்கழக மாணவர் ஒழுக்காற்றுச்சபையினால் முறையான விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர், பூர்வாங்க விசாரணைக் குழுவால் பரிந்துரைக்கப்பட்ட நடவடிக்கைகள் பேரவைத் தீர்மானத்துக்காகச் சமர்ப்பிக்கப்படவுள்ளன. (ஒ-5)

# ஈஸ்டர் தாக்குதல்: பொலிஸ் சார்ஜன்ட் பதவி நீக்கம்

கொழும்பு, ஜூன் 17

2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் கடமை தவறிய குற்றச்சாட்டின் பேரில் கட்டான பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய புலனாய்வுப் பிரிவின் பொலிஸ் சார்ஜன்ட் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ்மா அதிபரின் பணிப்புரைக்கு அமைய இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

சார்ஜன்டுக்கு எதிராக முதற்கட்ட விசாரணை நடத்தப்பட்டு, ஒழுக்காற்று மீறல்கள் தொடர்பாக 12 குற்றச்சாட்டுகளின் கீழ் குற்றப்பத்திரம் அனுப்பப்பட்டுள்ளது. அவர் தனது குற்றத்தை விசாரணை ஆரம்பத்தின்போதே ஒப்புக்கொண்டதால் அவரைப் பணி நீக்கம் செய்ய பொலிஸ்மா அதிபர் தீர்மானித்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் மேலும் தெரிவித்துள்ளது. (ஒ-இ)

# 'துரோகிப்' பட்டம் எமது பலவீனம்



## விக்னேஸ்வரன் புது விளக்கம்

**கொழும்பு, ஜூன் 17**

**மாறுபட்ட நிலைப்பாட்டாளர்களைத் துரோகிகளாக சித்திரிப்பது எமது தரப்பிலுள்ள பலவீனத்தையே காண்பிக்கின்றது என்று தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**


தமிழ் அரசியல் கட்சிகளால் நிராகரிக்கப்பட்ட 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்காக நீங்கள் ஏன் அரசாங்கத்துடன் ஒருங்கிணைந்தீர்கள்? ஏனைய தமிழ்த்தேசியக் கட்சிகள் அதற்கு எதிர்மறையாகக் கருத்து வெளியிடவில்லையா? என்று எழுப்பப்பட்டுள்ள கேள்விக்கு அளித்துள்ள பதிலிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அனைத்துத் தமிழ்த்தேசியக் கட்சிகளும் 13 ஆவது திருத்தத்தின் உடனடி நடைமுறைக்கு இணங்கியுள்ளன. தமிழ் காங்கிரஸ் மாத்திரமே அதனை நிராகரித்துள்ளது.

தமிழர்களுக்கான நிரந்தர தீர்வு என்ற விடயத்தில் அனைத்துத் தமிழ்த்தேசியக் கட்சிகளும் சமஷ்டி முறையின் வடிவங்களைத் தமது இறுதி இலக்காகக் கொண்டிருக்கின்றன. தமிழ்க் காங்கிரஸ் உள்ளடங்கலாக எந்தவொரு கட்சியும் பிரிவினையைக் கோரவில்லை. அரசமைப்பில் ஏற்கனவே உள்வாங்கப்பட்டுள்ள ஒன்றின் நடைமுறையாக்கத்தை முன்னிறுத்தி அரசாங்கத்துடன் ஒருங்கிணைவதை ஏனைய தமிழ்க் கட்சிகள் விரும்பத்தகாத விடயமாக நோக்கக்கூடாது.

தம்மில் இருந்து மாறுபட்டு சிந்திப்பவர்களை துரோகிகளாகவோ அல்லது அரசாங்க அணியில் பயணிப்பவராகவோ அடையாளப்படுத்துகின்ற பண்பு ஏதோவொரு வழியில் எமது தமிழ் அரசியல்வாதிகளிடம் வந்துவிட்டது. குறித்தவொரு நபர் எமது நிலைப்பாட்டிலிருந்து மாறுபட்ட நிலைப்பாட்டைக் கொண்டிருந்தாலும், அவர் என்ன கூறுகின்றார் என்பதைப் புரிந்து கொள்வதற்குப் பொறுமை அவசியமாகும். மாறாக அத்தகைய மாறுபட்ட நிலைப்பாட்டாளர்களைத் துரோகிகளாக சித்திரிப்பது எமது தரப்பிலுள்ள பலவீனத்தையே காண்பிக்கின்றது - என்றார். (ஒ-இ)

# பேராதனை மீண்டும் முதலிடம்



கொழும்பு, ஜூன் 17

'டைம்ஸ்' உலகத் தரவரிசையின்படி பேராதனை பல்கலைக்கழகம் மீண்டும் இலங்கையின் முதன்மைப் பல்கலைக்கழகமாக பெயரிடப்பட்டுள்ளது.

இதன்படி, இலங்கையின் முதலாவது பல்கலைக்கழகமாக பேராதனைப் பல்கலைக்கழகம் மாறியுள்ளதுடன், நான்காவது தடவையாகவும் பேராதனைப் பல்கலைக்கழகம் இலங்கையின் முதலாவது பல்கலைக் கழகமாக இடம்பிடித்துள்ளமை விசேட அம்சமாகும்.

இலங்கை சார்பில் கொழும்பு பல்கலைக்கழகம் மற்றும் பேராதனைப் பல்கலைக்கழகம் என்பனவே தரவரிசைப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளன. (ஒ-இ)

# ஆஸிக்கு ஆள்கடத்தல் சிப்பாய்கள் கைது!

கொழும்பு, ஜூன் 17

சட்டவிரோதமான முறையில் படகு மூலம் ஆஸ்திரேலியாவுக்கு ஆள்களைக் கடத்திய இராணுவ லான்ஸ் கோப்ரல் மற்றும் கடற்படைச் சிப்பாய் ஆகியோரை வர்த்தகக் கடத்தல் விசாரணை மற்றும் கடல்சார் குற்ற விசாரணைப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

சம்பூர் கடற்படை முகாமில் கடமையாற்றும் கடற்படைச் சிப்பாயும் போர் வீரர்கள் சேவை அதிகாரசபையில் கடமையாற்றும் லான்ஸ் கோப்ரல் ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டதாக பொலிஸ் தலைமையக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

2022ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் திருகோணமலை, சம்பூரிலிருந்து 25 பேர் கொண்ட குழு படகு மூலம் ஆஸ்திரேலியாவுக்குச் சென்று கொண்டிருந்தது. கடற்படையினர் இந்தக் குழுவை இலங்கைக் கடற்பகுதியில் வைத்து கைது செய்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-இ)

# ஜெனிவாவில் இலங்கை விவகாரம்

ஜெனிவா, ஜூன் 17

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 53ஆவது கூட்டத்தொடர் நாளை மறுதினம் திங்கட்கிழமை ஆரம்பமாகி ஜூலை 14 ஆம் திகதி வரை சுவிட்சர்லாந்தின் ஜெனிவா நகரில் நடைபெறவுள்ளது.

இலங்கை தொடர்பிலான வாய்மொழி அறிக்கையை எதிர்வரும் 21 ஆம் திகதி ஆணையாளர் சமர்ப்பிக்கவுள்ளார். (ஒ-இ)



# பொலிஸ்காவலில் வன்செயல் சட்டத்துக்குப் புறம்பானது

## சட்டத்தரணிகள் சங்கம் விசனம்

கொழும்பு, ஜூன் 17

மக்கள் பாதுகாப்பை முன்னிறுத்தி குற்றச்செயல்களைத் தடுக்க வேண்டிய பொலிஸார், பொலிஸ் காவலின்போது நிகழும் உயிரிழப்புகள் மற்றும் குற்றச்செயல்கள் தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டும். மீளநிகழாதிருப்பதை உறுதிப்படுத்த வேண்டும் என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கண்டனம் வெளியிட்டுள்ளது.


இதுதொடர்பில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வெளியிட்ட ஊடக அறிக்கையில்,

குற்றவாளிக்குக்கூட உயிர்வாழ்வதற்கான உரிமை உண்டு.

பொலிஸ்காவலின் கீழான சந்தேக நபரின் உயிரிழப்பு அல்லது சட்டவிரோதப் படுகொலை என்பன உயிர்வாழ்வதற்கான உரிமையை மீறும் செயல்.

பொலிஸ் காவலின்கீழ் இடம்பெறும் உயிரிழப்புகள் மற்றும் சித்திரவதைகள் என்பன தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. தமது பணியை உரியவாறு நிறைவேற்றுவதற்குத் தவறுகின்ற பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக வலுவான சட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றுள்ளது. (ச-இ)

# சுனாமியில் தப்பிய கைதி 19 ஆண்டுகளின் பின் கைது



கடந்த 2004ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமியின் போது தப்பியோடிய சாவுத்தண்டனைக் கைதி 19 ஆண்டுகளின் பின்னர் கடந்த வாரம் கொழும்பில் கைது செய்யப்பட்டுள்ளார்.

2001ஆம் ஆண்டு ராகம பிரதேசத்தில் இடம்பெற்ற கொலைச் சம்பவம் தொடர்பில் குற்றவாளியும் அவரது சகோதரரும் கைது செய்யப்பட்டிருந்தனர். குற்றவாளிக்கு மரணதண்டனை விதிக்கப்பட்ட நிலையில், 2004 ஆம் ஆண்டு சுனாமி அனர்த்தத்தின் போது நீர்கொழும்பு சிறைச்சாலையில் இருந்து வேறு சிறைச்சாலைக்கு மாற்றப்பட்ட போது அவர் தப்பியோடியிருந்தார். இப்போது 19 வருடங்களின் பின் அவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குமுதினிப் படகு தயார்: அனுமதிக்கு காத்திருப்பு

## இனி சுற்றுலாவிகளுக்கு கட்டணம்




**யாழ்ப்பாணம், ஜூன் 17**

**நெடுந்தீவு - குறிகாட்டுவான் இடையே சேவையில் ஈடுபடும் குமுதினிப் படகு 23 மில்லியன் ரூபாவில் மறுசீரமைக்கப்பட்டுள்ளது. இருப்பினும் சேவையில் ஈடுபடுவதற்கான உயிர் காப்புச் சான்றிதழ் இன்னமும் கிடைக்கவில்லை என்று வட மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் குருஸ் தெரிவித்தார்.**

குமுதினிப் படகு முழுமையாகத் திருத்தப்பட்டுள்ளது. இருப்பினும் பயணிகள் சேவையில் ஈடுபடுவதற்கு கப்பல் துறை அமைச்சின் கீழான உயிர் காப்புச் சான்றிதழ் பெறவேண்டும். அந்த அனுமதிக்காக காத்திருக்கின்றோம். அதுவரையில் நெடுந்தீவு கடற்கரையில் குமுதினிப் படகு நிறுத்தப்படும். எதிர்காலத்தில் குமுதினிப் படகில் பயணிப்பவர்களிடம் கட்டணம் அறவிடப்படுவது தொடர்பில் ஆலோசிக்கப்படுகின்றது. நெடுந்தீவைச் சேர்ந்த மக்கள் மற்றும் பணிக்காக அங்கு செல்லும் பணியாளர்கள் ஆகியோரிடம் கட்டணம் அறவிடாது சுற்றுலாவிகளிடம் மாத்திரம் கட்டணம் அறவிடுவதே இதுவரையிலான கொள்கையளவிலான முடிவாக உள்ளது. விரைவில் உறுதியான நிலைப்பாடு தெரியவரும். (ஒ-5,125)

# விரிவுரையாளர்களுக்கும் வரவுப் பதிவு கட்டாயம்

கொழும்பு, ஜூன் 17

இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் பணியாற்றும் விரிவுரையாளர்கள் மற்றும் போதனைசார் வள ஆளணியினரும் தமது வேலைத்தளங்களில் உள்வருகை மற்றும் வெளிச்செல்கையை உறுதிப்படுத்தும் வகையில் வரவுப் பதிவை மேற்கொள்ளவேண்டும் என நாடாளுமன்ற 'கோப்' குழு பரிந்துரை செய்துள்ளது.

'கோப்' குழுவின் பரிந்துரைக்கமைய, அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் வரவுப் பதிவை நடைமுறைப்படுத்துவதற்கான முன்மொழிவைத் தருமாறு துணைவேந்தர்கள் மற்றும் பணிப்பாளர்கள் குழுவிடம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கோரயிருக்கிறது.

பொது நிறுவனங்களுக்கான நாடாளுமன்றத் தெரிவுக்குழு ('கோப்') மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கிடையில் கடந்த ஏப்ரல் 28ஆம் திகதி நடைபெற்ற கூட்டமொன்றில் பல்கலைக்கழகங்களில் பணியாற்றும் போதனைசார் பணியாளர்களின் வரவுப் பதிவு தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது. அதன் முடிவில் அரசாங்கத்தில் பணியாற்றும் அனைவரும் தமது வருகை மற்றும் வெளிச்செல்லலை உரிய முறையில் பதிவு செய்ய வேண்டும் என 'கோப்' குழுவின் தலைவரால் சுட்டிக்காட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ-இ)

# கொள்ளுப்பிட்டியில் உல்லாச விடுதி முற்றுகை



## ஐவர் மடக்கிப்பிடிப்பு

கொழும்பு, ஜூன் 17

கொழும்பில் இயங்கிவந்த உல்லாச விடுதியொன்று முற்றுகையிடப்பட்டபோது அங்கு பாலியல்தொழிலில் ஈடுபட்ட பெண்கள் உட்பட ஐவர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்டவர்களிடம் மேற்கொண்ட விசாரணையில் பிலியந்தலை பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய யுவதியொருவருக்கு சுமார் 10 கோடி ரூபா பணம் மற்றும் மூன்று சொகுசு வாகனங்கள், மூன்று மாடி வீடு ஆகிய சொத்துமதிப்பு உள்ளமை எனத் தெரியவந்துள்ளது. (ச-44)

# மணி விழாவும் நூல் வெளியீடும்

யாழ்ப்பாணம், ஜூன் 17

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் முன்னாள் பொதுச் செயலாளரும் தற்போதைய ஆலோசகரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான சரவணமுத்து புவனேஸ்வரனின் மணிவிழாவும் 'வெற்றித்தேர்வு' நூல் வெளியீடும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நல்லூர் சயன்ஸ் அக்கடமி வளாகத்தில் இடம்பெறவுள்ளது.

சர்வதேச லயன்ஸ் கழக நூற்றாண்டு ஆளுநர் மருத்துவ கலாநிதி லயன் வைத்திலிங்கம் தியாகராஜா தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-ரி2)

## சிறைச்சாலைத் திணைக்களத்தில்

# 1,663 வெற்றிடம்

கொழும்பு, ஜூன் 17

சிறைச்சாலைகள் திணைக்களத்தில் ஆயிரத்து 663 பணியிடங்கள் வெற்றிடமாக காணப்படுகின்றன என சிறைச்சாலைகள் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

சிறைச்சாலைகள் திணைக்களத்தின் உயர் அதிகாரிகளை 'கோபா' குழு அழைத்து கலந்துரையாடியபோது இந்த விடயம் குறிப்பிடப்பட்டது.

மொத்த ஊழியர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு தேவைப்பட்டால் அது தொடர்பான திட்டங்கள் மற்றும் முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்குமாறு சிறைத்துறைக்கு 'கோபா' குழு அறிவுறுத்தியது. (ச-இ)




**நான் பாபா எந்த பக்கமும் சாயாத பாபா இப்பிடியொரு வசனத்தை ரஜனிகாந்த் பாபா படத்தில அடிக்கடி சொல்லுவார். ஆனால் இஞ்ச எல்லாப் பக்கமும் சாயிற பாபாவைத்தான் கன இடங்களில பாக்கக் கூடியதா இருக்கு. இப்பிடித்தான் கம்பஸ் துணைவேந்தர் ரேஸிலையும் உள்ளடி வேலைகளில சிலர் சாயத்தொடங்கிட்டினமாம். குறிப்பா கிழக்கு வாசல் பக்கமா உள்ளுக்க வாறதுக்கு விலங்கியல்காரர் கடும்பாடு படுறார் எண்டு கதையடிபடுகுது.**

**இப்ப துணைவேந்தரா உள்ளவருக்கு அடுத்தமுறை அந்தப் பதவியைக் குடுக்கமாட்டினம் எண்டதுதான் கனபேரின்ர ஊகம். ஏனெண்டால், அவர் வெள்ளந்தியா மன சுக்க ஒண்டும் வைச்சிருக்காம எல்லாத்தையும் வெளியால கொட்டிடுவார். இது கன பேருக்கு சிக்கலாகுமெண்டதால, அவரை காய்வெட்டிட்டு, புதிசா ஒராளைக் கொண்டாறதுதான் அரசாங்கத்தின்ர யோசினை. அந்த சான்ஸை எப்பிடியாவது தவறவிடக்கூடாது எண்டதில கிழக்கு வாசலால வர நினைக்கிறவர் உறுதியா இருக்கிறார். அதுக்காக எந்தப்பக்கமும் சாயிறதுக்கு அவர் ரெடியாம்.**

**பிள்ளையாருக்குத்தானே எல்லாரும் முதல் தேங்காய் அடிக்கிறவை. அதை மாதிரி இவரும் கிட்டடியில அரசாங்கத்தோட ஒட்டி உறவாடுற, ஒருகாலத்தில இயக்கத்தில இருந்து பிறகு மாகாணத்தின்ர முதலமைச்சராவும் இருந்து, சிறைசென்று மீண்ட பிள்ளையாரைச் சந்திச்சிருக்கிறார். ஆனால் அவர் நம்பிக்கை தாறமாதிரி ஒண்டும் சொல்லாமல் நழுவிட்டாராம். அந்தாளை நம்பினால் பிள்ளையாரின்ர கலியாணம் மாதிரி, காரியம் அப்பிடியே இழுபட்டு நடக்காமலே போடும் எண்டது விலங்கியல் காரருக்கு விளங்கிட்டுதாம். சடாரெண்டு விலங்கியல்காரர் விலாங்குமீனா மாறி, கடல்பக்க அமைச்சரிட்ட வடக்குப்பக்கமாக நீந்தி வந்து சந்திச்சிருக்கிறார்.**

**'நீ காற்று, நான் மரம் என்ன சொன்னாலும் தலையாட்டுவேன்' எண்டு பாட்டுப்பாடாத குறையா, கடலமைச்சரோட 'டீல்' போட்டிருக்கிறார். நம்பி வந்திட்டியள், நல்லதே நடக்கும் எண்டு கடலமைச்சரும் சொல்லியனுப்பினவராம். அதுக்கிடையில தன்ர அமைச்சில உள்ள நிறுவனத்துக்கும் விலங்கியல்காரரை ஆலோசகராப் போட்டு நல்லெண்ணத்தைக் காட்டியிருக்கிறாராம் அமைச்சர். வரமுதலே இப்பிடி சரணாகதியடையிற விலங்கியல்காரர் வந்தால் கம்பஸ் எப்பிடி விளங்கும்?**



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரசவத்தின்போது கணவருக்கும் லீவு?

கொழும்பு, ஜூன் 17

தொழிலாளர்களின் சட்டங்களில் புதிய பரிந்துரைகளை அறிமுகப்படுத்தி திருத்தங்களை மேற்கொள்வது தொடர்பில் தயாரிக்கப்படவுள்ள சட்ட வரைவு அடுத்த மாதம் தொழிலாளர் ஆலோசனைச்சபைக்கு சமர்ப்பிக்கப் படவுள்ளது என தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

இந்த திருத்தச் சட்டவரைவு தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

தொழிலாளர் விரும்பும் வேலைநாள்கள் மற்றும் நேரத்தை மாற்றிக்கொடுப்பதற்கும் புதிய தொழிலாளர் சட்ட திருத்தத்தில் யோசனைகள் முன்வைக்கப் பட்டுள்ளன.

அத்துடன், மனைவிக்கு பிரசவத்தின் போது கணவருக்கு விடுமுறை வழங்குவது தொடர்பிலும் புதிய சட்டத்தில் திருத்தங்கள் கொண்டுவரப்படவுள்ளன - என்றார். (ச-இ)

# முனீஸ்வரன் ஆலய அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், ஜூன் 17

யாழ்ப்பாணம், கோட்டை ஸ்ரீ முனீஸ்வரன் ஆலயத்தின் மணவாளக் கோல அலங்கார உற்சவம் எதிர்வரும் 20ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 28 நாள்கள் உற்சவம் இடம்பெறவுள்ளது.

அதற்கமைய அடுத்த மாதம் 13 ஆம் திகதி வியாழக்கிழமை சப்பறத் திருவிழாவும் மறுநாள் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரதோற்சவமும் மறுநாள் 15 ஆம் திகதி சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும் என ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ச)



கொழும்பு, ஜூன் 17

**வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் தமிழ் வாக்குகளை பெற்றுக்கொள்வதற்காக ஜனாதிபதி தொல் பொருள் மரபுரிமைகளை ஓர் ஆயுதமாகப் பயன்படுத்திக் கொள்கிறார் எனப் பிக்குகள் தெரிவித்துள்ளனர். அவர்களின் கருத்துக்கள் வருமாறு:-**

குருந்தூர்மலையில் தமிழர்களுக்குச் சொந்தமான காணி காணப்படுமாயின் அவற்றை விடுவிக்குமாறு ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். முல்லைத்தீவு குருந்தூர் விகாரைக்குச் சொந்தமான காணி அளவிடப்பட்டு 1933 ஆம் ஆண்டு அதி விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டது. 78 ஏக்கர் வர்த்தமானி ஊடாக குருந்தூர் விகாரைக்கு உறுதிப்படுத்தப்பட்டது.

குருந்தூர்மலையில் பௌத்த தொல்பொருள் சின்னங்கள் காணப்படுவதால் அதனை ஆய்வு செய்வதற்காகவே மேலதிகமாக 223 ஏக்கர் காணி தொல்பொருள் பாதுகாப்புப் பகுதியாக வர்த்தமானி அறிவித்தல் ஊடாக வெளியிடப்பட்டது.

தமிழ் வாக்குகளைப் பெற்றுக்கொள்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொல்பொருள் மரபுரிமைகளை சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கிறார். குருந்தூர் விகாரை மற்றும் குருந்தூர் மலையில் உள்ள பௌத்த மரபுரிமைகளை பாதுகாக்க உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால் மிகப் பெரிய விளைவுகள் ஏற்படும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனை தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளராகவும், நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியனை தொல்பொருள் மற்றும் மரபுரிமைகள் அமைச்சராக நியமிக்க வேண்டும். இதன் பின்னர் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள பௌத்த மரபுரிமைகள் பாதுகாக்கப்படும். குருந்தூர் மலைக்குச் சொந்தமான காணிகளை அரசியல் நோக்கத்துக்காகப் பயன்படுத்துவதை ஏற்றுக்கொள்ளமுடியாது. இந்தவிடயம் தொடர்பில் வெகுவிரைவில் மகாநாயக்க தேரர்களை நாடுவோம். (ஒ-இ)

# மஹோற்சவம்

கொடிகாமம், ஜூன் 17

சாவகச்சேரி அருள்மிகு அமிர்தபாஷினி சமேத சந்திரசேகர வாரிவன சிவன் ஆலய வருடாந்தப் பெருந் திருவிழா இன்று சனிக் கிழமை ஆரம்பமாகிறது.

எதிர்வரும் 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறும். (ரி-159)

# மயானத்துக்கு மண்டபம்

சாவகச்சேரி, ஜூன் 17

சாவகச்சேரி பிரதேசசபையின் கீழுள்ள ஊற்றல் இந்துமயானத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இளைப்பாறு மண்டபம் கடந்த ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

கைதடி கிழக்கு சனசமூக நிலையப் புலம்பெயர்வாழ் அங்கத்தவர்களின் நிதியுதவியில் இந்த இளைப்பாறு மண்டபம் அமைக்கப்பட்டு கையளிக்கப்பட்டது. அத்துடன் கைதடி கிழக்கு சனசமூக நிலைய புலம்பெயர் உறவுகளின் நிதியுதவியில் இந்துமயானத்தில் எரிகொட்டகை நிர்மாணிப்பதற்கு அடிக்கல்லும் அன்றைய தினம் நடப்பட்டது. (ச)

# (ராசிபலன்)




தன்னம்பிக்கையுடன் செயற்டுவீர்கள். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பாராத செலவுகள் அதிகரிக்கும்.


உடல் ஆரோக்கியம் மேம்படும். சிலருக்கு திடீர் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. எதிரிகள் வகையில் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். காரியங்கள் அனுகூலமாக முடியும்.


சகோதரர்களின் ஆதரவு உற்சாகம் தரும். தந்தைவழியில் திடீர் செலவுகள் ஏற்படக்கூடும். புதிய முயற்சி அனுகூலமாக முடியும். சுபச்செய்தி ஒன்று கிடைக்க வாய்ப்பு உண்டு.


எதிர்பார்த்த காரியம் இழுபறியாக முடியும். காரியங்களில் வெற்றியும் உண்டாகும். புதிய முயற்சியை தொடங்குவது நல்லது. கவனமாகச் செல்லவும். சமாளிக்க வேண்டி வரும்.


எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டியது அவசியம். புதிய முயற்சியை தவிர்க்கவும். பேசும் போது வீண் மனஸ்தாபம் ஏற்படும். நிதானம் தேவை.


புதிய முயற்சி சாதகமாக முடியும். அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியம், வீண் அலைச்சலையும் செலவுகளையும் கொடுத்தாலும், சாதகமாக முடிந்துவிடும்.


எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். செலவு செய்ய வேண்டி வரும். உறவினர்களால் சங்கடங்கள் உண்டாகும்.


மனதில் உற்சாகமும், செயல்களில் பரபரப்பும் காணப்படும். உங்கள் யோசனையை ஏற்றுக் கொள்வர். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.


எதிர்பார்த்த பணம் வந்தாலும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். புதிய முயற்சி எதையும் மேற்கொள்ளவேண்டாம். செலவு செய்ய வேண்டி வரும்.


புதிய முயற்சி சாதகமாக முடியும். காரிய அனுகூலம் உண்டாகும். உங்கள் முயற்சிகளுக்கு ஆதரவாக இருப்பார்கள். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.


மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். மனஉறுதியுடன் முடிவெடுத்து செயற்படுவீர்கள். சிலருக்குக் குடும்பத்துடன் குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும்.


மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும். துணிச்சலாகச் செயற்படுவீர்கள். புதிய முயற்சி சாதகமாக முடியும். ஆதாயம் உண்டாகும். சுபச்செய்தி கிடைக்கும்.

# ஒரேயடியான இலக்கல்ல!



கொழும்பு, ஜூன் 17

அடுத்த 10 ஆண்டுகளில் ஆசியப் பிராந்தியத்தில் வளர்ச்சியடைந்த நாடாக இலங்கையை முன்னோக்கி நகர்த்த குறைந்த பட்சம் மலேசியா, சீனா போன்ற நாடுகளைப் பார்க்க வேண்டும். சிங்கப்பூர் போன்ற பெரும் வளர்ச்சியை ஒரேயடியாக எட்டுவது எமது இலக்கல்ல என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல வேண்டுமானால் மூன்று ஆண்டுகளில் 8 வீதம் முதல் 9 வீதம் வரை பொருளாதார வளர்ச்சியை எட்டவேண்டும். பொருளாதார வளர்ச்சி விகிதத்தைப் பாதிக்கும் பல காரணிகள் உள்ளன. இன்று தென்கொரியா, சிங்கப்பூர், ஜப்பான் ஆகிய நாடுகள் மனிதவளத்தைப் பயன்படுத்தி அபிவிருத்தி அடைந்துள்ளன.

அந்த நிலைக்கு நாம் எப்படிச் செல்வது என்பதை முதலில் தீர்மானிக்க வேண்டும். நாம் குறைந்தபட்சம் மலேசியாவையும் சீனாவையும் பார்க்க வேண்டும். அதன் பின்பே சிங்கப்பூர் போன்ற மாபெரும் வளர்ச்சிக்குச் செல்லலாம். ஒரேயடியாக அதனைச் செய்ய முடியாது. எங்கள் இலக்கு மிகவும் போட்டி நிறைந்த பொருளாதாரமாகும்.

எனவே, முதலில் கல்வி, பொருளாதாரக் கட்டமைப்பு, காலநிலை மாற்றம் ஆகிய மூன்று துறைகளும் ஒன்றிணைய வேண்டும் என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## இனியும் அவர்கள் தயாரில்லை!

இந்த நாடு ஒருபோதும் உருப்படுவதற்கான வாய்ப்புகள் தொலைதூரத்திலும் தெரியவில்லை. யானைக்கு மதம் பிடித்தால் என்ன நடக்குமோ அதுபோன்றுதான் மனிதனுக்கு 'மதம்' தலைக்கேறினாலும் தீர முடியாத பிரச்சினைதான். இலங்கை என்கின்ற அழகிய சிறிய தீவு சிதைந்து சுடுகாடாகிப்போய்க் கொண்டிருக்கின்றது. அந்நியச் சக்திகளின் தலையீடுகளுக்கு வெற்றிலை வைத்து வரவேற்றுக்கொண்டிருக்கின்றோம். இலங்கை 1948 ஆம் ஆண்டு சுதந்திரம் அடைந்ததாகச் சொல்லப்பட்டாலும், இந்தத் தீவு தற்போது மீண்டும் பல்வேறு நாடுகளின் அடிமையாகிக்கொண்டு இருக்கின்றது. இலங்கையில் பௌத்தத்துக்கு முதலிடம் வழங்கப்பட்டிருக்கின்றது. அதுதான் எல்லாப் பிரச்சினைகளினதும் ஆணிவேர் என்பது வெளிப்படை. அதிலிருந்து ஆட்சிக்குவரும் எந்தவொரு தலைவர்களாலும் மீளமுடியாமல் இருக்கின்றது. தொல்பொருள் என்பது அனைத்து இனங்கள் – மதங்களுக்கும் உரியது. ஆனால் இலங்கையில் மாத்திரம் அதை சிங்கள – பௌத்தர்களுக்குரியதாக்கியிருக்கின்றார்கள். அவர்களது இலச்சினையில் கூட பௌத்தத்துக்கு மாத்திரமே இடமளிக்கப்பட்டிருக்கின்றது. இப்போது தொல்பொருள் ரூபத்தில் தென்னிலங்கையில் பெருந்தீயொன்று பற்றவைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தன்னைத் தீவிர சிங்கள – பௌத்தனாக காட்டிக்கொள்வதில் அவ்வளவு ஈடுபாடு காட்டுவதில்லை. அதற்காக அவர் பௌத்தத்துக்குரிய முதலிடத்தை கொடுக்கமாட்டார் என்று சொல்லவில்லை. இதுவரையில் இலங்கையின் ஆட்சி பீடத்திலிருந்தவர்களில் ஒப்பீட்டளவில் ரணில் விக்கிரமசிங்கவிடம், சிங்கள – பௌத்த தீவிரவாதம் வெளித்தெரிவது குறைவே. இப்படிப்பட்ட ரணில் விக்கிரமசிங்ககூட தனது ஆட்சியைச் சுதந்திரமாக முன்னெடுக்க முடியாதவாறு பௌத்த பீடங்களிடமிருந்தும், பிக்குகளிடமிருந்தும் எதிர்ப்புக்களைச் சந்திக்கவேண்டியவராகவும் இருக்கின்றார். தனது முன்னைய முடிவுகளிலிருந்து பின்வாங்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகிறார். தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான முரண்பாடு கடந்த 8 ஆம் திகதிய சந்திப்பில் ஏற்பட்டது. அது தொடர்பான காணொலி இரண்டு நாள்களின் பின்னரே கசிய விடப்பட்டது. அது கசியவிடப்பட்டதும் தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர் பதவி துறந்தார். அந்தக் காணொலி ஜனாதிபதி ஊடகப் பிரிவால் வெளியிடப்படவில்லை. கூட்டத்தில் பங்கேற்ற யாரோ ஒருவரே அதை வெளியிட்டிருக்கின்றார். அதை வெளியிட்டமை மற்றும் பணிப்பாளரின் பதவி விலகல், தென்னிலங்கைக் கூச்சல்கள் எல்லாம் ஒரே நேர்கோட்டில் பொருந்திப்போகின்றன. திட்டமிட்டு அந்தக் காணொலி வெளியிடப்பட்டிருக்கின்றது என்பதை ஊகிப்பதற்கு 'ஜேம்ஸ் பொண்ட்' அறிவு தேவையில்லை.


தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளரின் பதவி விலகலையடுத்து தென்னிலங்கையில் ஜனாதிபதி ரணிலுக்கு எதிரான கொந்தளிப்பு பலமாகியிருக்கின்றது. இந்தக் கொந்தளிப்புகள் இன்னும் வலுப்பெறவும் தொடங்கியிருக்கின்றன. இதனையடுத்து ஜனாதிபதியும் பின்வாங்கத் தொடங்கியிருக்கின்றார்.

வடக்கில் முல்லைத்தீவு குருந்தூர் மலை மற்றும் கிழக்கின் திருகோணமலை திரியாய் ஆகிய இடங்களில் அமைந்துள்ள இரண்டு விகாரைகளுக்கும் 5 ஆயிரம் ஏக்கர் காணிகள் தொல்பொருள் திணைக்களத்தால் அடையாளப்படுத்தப்பட்டிருந்தன. இவற்றையே ஜனாதிபதி கேள்விக்கு உட்படுத்தியிருந்தார். தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளரும் அதன் பின்னரே பதவி விலகியிருந்தார். தென்னிலங்கை எதிர்ப்புகளையடுத்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்தக் காணிகள் மக்களுக்கு பிரித்து வழங்கப்படவில்லை என்றும் அந்தக் காணிகள் தொடர்பில் ஆராயக் குழு நியமித்ததாகவும் அறிக்கை விடுத்திருக்கின்றார். இங்கே கவனிக்கப்படவேண்டிய மற்றொரு விடயமும் அடங்கியிருக்கின்றது. வழக்கமாக ஜனாதிபதி ரணிலுக்கு முட்டுக்கொடுக்கும் பெரமுனவினரோ அல்லது அமைச்சரவையிலுள்ள அமைச்சர்களோ, தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர் பதவி விலகல் விவகாரத்தை முன்வைத்து தென்னிலங்கையில் எழுந்துள்ள கூச்சல்களுக்கு, ரணிலுக்கு ஆதரவாக ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. மாறாக ஜனாதிபதியின் ஐக்கிய தேசியக் கட்சியினரே ஜனாதிபதியை நியாயப்படுத்தி வருகின்றனர். ஒட்டுமொத்தத்தில் பெரமுனவினர் சந்தர்ப்பம் பார்த்து ரணிலின் காலைவாரியிருக்கின்றனர். தென்னிலங்கையின் வாக்கு வங்கியாகவும், ஆட்சிபீடத்தை தீர்மானிக்கும் சக்தியாகவும் பௌத்தம் இருப்பதால் அதிலிருந்து ஓரடி கூட விலகிச் செல்வதற்கு அவர்கள் தயாரில்லை. அதற்குத் தயாரில்லாத வரையில் இந்த நாட்டில் நல்லிணக்கம் என்ற பேச்சுக்கு இடமுமில்லை, ஒரே நாடாக வாழ்வதற்கும் தமிழர்களை அவர்கள் அனுமதிக்கப்போவதில்லை.

நாளொரு நல்வார்த்தை

"நாம் சரியான விடயங்களை விதைக்கவில்லை என்றால், தவறான விடயங்களை அறுவடை செய்ய வேண்டியிருக்கும்"

– மாயா அஞ்சலோ




# குருந்தூர் விகாரைக்காணி மக்களுக்குப் பகிரப்படாது

## ஜனாதிபதி அறிவிப்பு



**கொழும்பு, ஜூன் 17**

**முல்லைத்தீவு குருந்தூர் விகாரை மற்றும் திருகோணமலை திரியாய் விகாரைக்கு 5 ஆயிரம் ஏக்கர் காணிகோரப்பட்டுள்ள நிலையில் உடனடியாக அதனை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக, குழுவொன்றை நியமிப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிர மசிங்க தீர்மானித்துள்ளார். அத்துடன் குருந்தூர் விகாரைக் காணி தமிழ் மக்களுக்குப் பகிரப்படவுள்ளது என்ற தகவலையும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு மறுத்துள்ளது.**

தொல்பொருள் தேவைக்காக குருந்தூர் மலைப்பகுதியில் 3 ஆயிரம் ஏக்கர் காணியும் திருகோணமலை திரியாய் விகாரைக்காக 2 ஆயிரம் ஏக்கர் காணியும் கோரப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்த காலத்தில் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி செயலணியால் இந்தப் பகுதி தொல்பொருளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளதுடன், தொல்பொருள் பாதுகாப்பு நோக்கங்களுக்காக இதனைக் கோருவதாக ஜனாதிபதி செயலணி குறிப்பிட்டிருந்தது.

அநுராதபுரம் மகா விகாரை அல்லது பாரம்பரியமிக்க சிகிரியாவுக்குக் கூட இவ்வாறு அதிகளவான காணிகள் இல்லாதபோது ஏன், குருந்தூர்மலை மற்றும் திரியாய் விகாரை ஆகியவற்றுக்கு 5 ஆயிரம் ஏக்கர் காணியைக் கோருகின்றனர் என்பதை விஞ்ஞானரீதியிலான தரவுகளுடனும் ஆதாரங்களுடனும் கண்டறிய ஜனாதிபதி இந்தக் குழுவை நியமிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-இ)

## 60 மருந்துகளின் விலை 16 சதவீதத்தால் குறைப்பு

கொழும்பு, ஜூன் 17

நாட்டில் 60 விதமான மருந்துகளின் விலைகள் 16 சதவீதத்தால் குறைக்கப்பட்டுள்ளன. இதற்கான வர்த்தமானி அறிவித்தலை சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல வெளியிட்டுள்ளார். விலைக் குறைப்பு எதிர்வரும் 26ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வருமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ -இ)

## 'குருந்தி'க்கு தரவெடுக்க வருகின்றார் கம்மன்பில!

கொழும்பு, ஜூன் 17

தொல்பொருள் இடமென ஜனாதிபதி செயலகத்தால் 'குருந்தி விகாரை' என அடையாளப்படுத்தப்பட்டுள்ள முல்லைத்தீவு, குருந்தூர்மலைக்கு நாடாளுமன்ற உறுப்பினர் உதயகம்மன்பில நேரில் வந்து தரவுகள் சேகரிக்கவுள்ளார் எனக் கூறப்படுகிறது.

'குருந்தி' விகாரை உட்பட புராதனச் சின்னங்கள் தொடர்பில் பொய்ப் பரப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் 'குருந்தி' தொடர்பில் முன்வைத்த கருத்துகள் பொய் என்று நிரூபிக்க, நானும் கட்சிப் பிரதிநிதிகள் குழுவும் எதிர்வரும் 21ஆம் திகதி செல்லத் தீர்மானித்துள்ளோம் - என அவர் குறிப்பிடடார். (ச-இ)

நாளை

18.06.2023
ஞாயிற்றுக்கிழமை
ஆனி 03

சுபநேரம் : 08.53 - 10.23
ராகுகாலம் : 04.23 - 05.53

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்களையும் மனிதர்களாக மதிக்கப் பழகுங்கள்



## யாழ். குயர் சமூகம் ஆதங்கம்

**யாழ்ப்பாணம், ஜூன் 17**

**"நாங்கள் தன்பாலீர்ப்பாளர்களாக - திருநர்களாக - இருபாலீர்ப்பு உள்ளவர்களாக பாலீர்ப்பு அற்றவர்களாக இருப்பது இயற்கையானது. இந்தச் சமூகத்தில்தான் நாங்களும் வாழ்ந்துகொண்டிருக்கிறோம் என்பதை நீங்கள் உணரவேண்டும். மனிதர்களை மனிதர்களாக மதிக்கக் கற்றுக்கொள்ளுங்கள் - எங்களையும் அங்கீகரியுங்கள்" என யாழ்ப்பாணம் குயர் சமூகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.**

யாழ்ப்பாணம் குயர் சமூக மக்களின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை யாழ்ப்பாணத்திலுள்ள தனியார்விடுதியில் சமத்துவம் பால்நிலை அடையாள வெளிப்படுத்தலை வலியுறுத்தி ஊடகசந்திப்பு இடம்பெற்றது.

இதுதொடர்பில் அவர்கள் மேலும் ஊடகங்களுக்குத் தெரிவிக்கையில், யாழ்ப்பாணத்தில் சுமார் 100 பேர் வரையில் குயர் மக்களாகக் காணப்படுகின்றனர். அவர்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றனர். எமது உரிமையை வலியுறுத்தி அண்மையில் மேற்கொண்ட நடைபயணம் தொடர்பில் சமூக வலைத்தளங்களில் பல்வேறு மாறுபட்ட கருத்துகளைப் பகிர்ந்து கேலி கிண்டலுக்கு உள்ளாகியுள்ளார்கள்.

ஆரம்பகாலம் தொட்டு எம்மைப் பற்றிய விழிப்புணர்வு அதிகளவானோருக்கு இல்லை. படித்தவர்கள் கூட குயர் மக்கள் தொடர்பில் கவனத்தில் எடுப்பதில்லை. வெறும் பாலியல் தேவையை மட்டும் கருத்திற்கொண்டவர்களாக எம்மைப் பார்க்கின்றனர். வேலைவாய்ப்பு இல்லை, கல்வியில்லை, உரிமை மறுப்பு, அரச சேவைகளை பெற்றுக் கொள்வதில் பிரச்சினைகள் எனப் பல வழிகளில் நாம் ஒடுக்கப்படுகிறோம்.

எமது திறமைகளை ஊக்குவிக்கும் தளங்கள் அவசியம். தனிநபருடைய உணர்வுகளுக்கு மதிப்பளிக்க வேண்டும். ஒவ்வொரு மனிதர்களையும் மனிதர்களாக மதிக்க கற்றுக்கொள்ளுங்கள் - என்றனர். (ச-23)

## கல்வியுடன் பண்பாடுகளையும் மாணவர்களுக்கு ஊட்டுங்கள்!

### டிப்ளோமாதாரிகளுக்கு ஆளுநர் அறிவுரை

ஆசிரியர்கள் கல்வி மாத்திரம் கற்பிப்பவர்கள் அல்லர். கல்வியுடன் எமது பண்பாட்டை- கலாசாரத்தை - பாரம்பரியத்தை போதிப்பவர்களாக பணியாற்ற வேண்டும். நாம் தொலைத்துக் கொண்டிருக்கும் எங்களுடைய விழுமியங்களை, மரபுகளை, பண்புகளை மாணவர்களுக்கு விதைக்க வேண்டியவர்கள் ஆசிரியர்களேயாவர் - இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்தார்.

தேசிய போதனாவியல் டிப்ளோமாதாரர்கள் 350 பேருக்கு நியமனம் வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் கலந்துகொண்டு அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணம், எங்கே தன்னுடைய கலாசாரத்தை - பழமையை - பண்புகளை மறந்து விடுமோ என்ற அச்சம் அனைவரிடமும் தோன்றியிருக்கின்றது. இந்தச் சமூகத்திலே குறிப்பாக பாடசாலை மாணவர்களிடமும் இளம் வயதினரிடமும் இன்று சமூகச் சீரழிவுகள் தலைதூக்கியுள்ளன. அதனால் துர்நடத்தைகள் அதிகளவில் பதிவாகின்றன. இவை ஏன், எதற்காக நடக்கின்றன என்பதை ஆராய்வதைவிட அதனை எப்படிக் கட்டுப்படுத்துவது - முறியடிப்பது, இளம்சமூகத்தை பாதுகாப்பது என்பது தொடர்பில் நாம் சிந்திக்கவேண்டும். உங்களை ஆசிரியர்களாக அனுப்பவில்லை. கல்வித் தூதர்களாக அனுப்புகின்றோம். சிறந்த ஒழுக்கமுள்ள மாணவ சமூகத்தை உருவாக்குவதற்கு வழிப்படுத்துவதற்கு ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் உறுதிபூண வேண்டும் - என்றார். (ச-125)

## கூட்டுறவுச்சபையின் தேசிய மட்டப் போட்டியில் யாழ். மாணவர்கள் வெற்றி

யாழ்ப்பாணம், ஜூன் 17

101ஆவது கூட்டுறவுதினத்தை முன்னிட்டு, இலங்கை தேசிய கூட்டுறவுச்சபையால் தேசிய ரீதியாக பாடசாலை மாணவர்களிடையே கடந்த வெள்ளிக்கிழமை நடத்தப்பட்ட போட்டிகளில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த மூன்று மாணவர்கள் வெற்றியீட்டியுள்ளனர்.

வெற்றியீட்டிய யாழ். மாணவர்கள் விபரம் -

- **பேச்சு** - தரம் - 6,7,8
  முதலிடம் - **நிஷாந்தன் திருவரேஸ்வர்**
  (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி)
- **பேச்சு** - தரம் - 9,10,11
  முதலிடம் - **இந்திரஜித் கார்த்திகன்**
  (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி)
- **கட்டுரை** - தரம் - 12,13
  மூன்றாம் இடம் - **சப்திகா வேவிராசா**
  (வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி)

(ச-ரி-159)

## அடுத்த மாதம் முதல் 'யாழ்தேவி' வழமைக்கு

கொழும்பு கோட்டையில் இருந்து காங்கேசன்துறை வரையிலான ரயில் பயணங்கள் வழமையான கால அட்டவணையின்படி அடுத்த மாதம் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளன என ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது. அநுராதபுரத்தில் இருந்து வவுனியா வரையான வீதியின் திருத்தப் பணிகள் நிறைவுற்றுள்ளன. அதன்படி தண்டவாள திருத்தப் பணிகளுக்காக கடந்த ஜனவரி இடைநிறுத்தப்பட்ட அநுராதபுரம்-ஓமந்தைக்கு இடையிலான ரயில் சேவை அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படுகிறது. கொழும்பு கோட்டையில் இருந்து காங்கேசன்துறை வரையிலான ரயில் பயணங்களும் வழமையான கால அட்டவணையின்படி மீண்டும் வழமைக்குத் திரும்பவுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

### கடலுணவு விலை உயர்வு

யாழ்ப்பாணத்தில் கடலுணவுகளின் விலை திடீரென உயர்வடைந்துள்ளதுடன் பற்றாக்குறையும் நிலவுவதாக நுகர்வோரால் தெரிவிக்கப்படுகிறது.

கடும் வரட்சி வெப்பத்தால் கடலுணவுகளின் பிடிபாடு வீழ்ச்சியுற்றுள்ளது. (ச-17)

## கைது



ஆனைக்கோட்டை முள்ளிப் பகுதியில் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 33 வயதான இளைஞரொருவர் மானிப்பாய் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மேற்கொள்ளப்பட்ட விசேட ரோந்து நடவடிக்கையில் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார்.

சந்தேகநபரிடமிருந்து 750மில்லிகிராம் கஞ்சா மீட்கப்பட்டது.

சந்தேகநபரை சட்டநடவடிக்கைக்குட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ச-125)

## தேனீ வளர்ப்பு பயிற்சிப்பட்டறை

யாழ்ப்பாணம், ஜூன் 17

சுயதொழிலை ஊக்குவிக்கும் வகையில், யாழ். மாவட்ட விவசாயப் பிரிவினரால் தேனீ வளர்ப்பு பயிற்சிப்பட்டறை யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.

மாவட்ட செயலர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், பங்கேற்ற 35க்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு தேனீ வளர்ப்பு முறை தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டது. எதிர்வரும் நாள்களில் தேன் உற்பத்திக்குத் தேவையான உபகரணங்களும் பயனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-ரி-125)

## சிறுதானியக் கண்காட்சி



சிறுதானிய உணவுக் கண்காட்சி யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் அமைந்துள்ள விவசாயத் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது.

'சிறுதானிய உணவை ஊக்குவிக்கும் நாள்' என்ற தொனிப்பொருளில் இந்தக் கண்காட்சி இடம்பெற்றது.

கண்காட்சியில் கம்பு, தினை, வரகு, சாமை உள்ளிட்ட சிறுதானியங்களில் இருந்து எவ்வாறு உணவு தயாரிப்பது? அதன் ஊடாக தயாரிக்கப்பட்ட உணவுகள் என்பன காட்சிப்படுத்தப்பட்டன.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ், வடக்கு மாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, யாழ்ப்பாண மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரன், விவசாயத் திணைக்கள அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலரும் பங்கேற்றனர். (ச)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



கிளிநொச்சி வட்டக்கச்சி பகுதியில் அமைந்துள்ள லயன் ஒப் வேல்ட் எல்.கே.ஓ.904 (Lighan Of the world Lko904) தனியார் சிறுவர் பாடசாலை விளையாட்டுப் போட்டி நிகழ்வு இராமநாதபுரம் தேசிய பாடசாலை மைதானத்தில் அண்மையில் சிறப்புற நடைபெற்றது. (ய-113)



நாவலர் சோலை முன்பள்ளி மாணவர்களுடைய வருடாந்தக் கண்காட்சி நிகழ்வு யாழ். நீராவியடி சைவ பரிபாலனசபையில் கடந்த 14ஆம் திகதி புதன்கிழமை சிறப்பாக இடம்பெற்றது. (ய-27)



கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நூற்றாண்டு விழாவை அடையாளப்படுத்தும் முகமாக நூற்றாண்டு நினைவிடம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு கலாசாலையின் முதல்வர் செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன் தலைமையில் கடந்த 14ஆம் திகதி புதன்கிழமை நடைபெற்றது.

குறித்த நிகழ்வில் நூற்றாண்டு நினைவிடம் அமைப்பதற்கான நிதிப்பங்களிப்பை வழங்கும் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முன்னாள் விரிவுரையாளரும், கோப்பாய் நவமங்கை நிவாச நிறுவுநருமான கலாநிதி.திருமதி.சுவர்ணா நவரத்தினம் விருந்தினராகக் கலந்துகொண்டு அடிக்கல்லை நாட்டி வைத்தார். (ய-66)





மானிப்பாய் சத்தியசாயி பாடசாலையில் தரம்-8,9,10,11 இல் கல்வி கற்கும் மாணவர்களுக்கான சிறுவர் பாதுகாப்பு, முறைப்பாட்டுப் பொறிமுறை, தொடுகை முறைகள் மற்றும் போதைப்பொருள் தடுப்புத் தொடர்பிலான விழிப்புணர்வு நிகழ்வு கடந்த 13ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. (ய-66)

## கூடாரம் கையளிப்பு



## குருதிக் கொடை



மருத்துவ பீட மாணவன் இம்மானுவேல் சாமுவேலின் ஐந்தாவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் 35 ஆவது அணியின் பழைய மாணவர்களும், மருத்துவபீட மாணவர் ஒன்றியமும் இணைந்து யாழ். போதனா மருத்துவமனை குருதிவங்கிப் பிரிவின அனுசரணையில் மாபெரும் குருதிக்கொடை முகாம் கடந்த 12ஆம் திகதி திங்கட்கிழமை மேற்படி பல்கலைக்கழக மருத்துவ பீட சிற்றுண்டிச்சாலையில் நடைபெற்றது. (ய-66)



வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் சாரணர் துருப்புக்களுக்கான கூடாரங்கள் நேற்றுமுன்தினம் 15ஆம் திகதி வியாழக்கிழமை வழங்கப்பட்டன.

பழைய மாணவர் சங்கத்தினூடாக, குறித்த கூடாரங்கள் பிரதி அதிபர், சாரணர் பொறுப்பாசிரியர் மற்றும் சாரணர்களிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது. (ய-27)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# தொல்லியலை அரசியல் ஆக்காதீர்!

## அகிலவிராஜ் காரியவசத்தின் கோரிக்கை இது

கொழும்பு, ஜூன் 17

**நாட்டில் தொல்பொருள்கள் இருக்கும் இடங்கள் பாதுகாக்கப்படவேண்டும். அவற்றை இன, மதவாதக் கோணத்தில் பார்க்கக்கூடாது. தொல்பொருள்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கும்போது மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் அதை முகாமைத்துவம் செய்யவேண்டும்.**

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் உப தலைவர் அகிலவிராஜ் காரியவசம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளுடன் இடம்பெற்ற கூட்டத்தில் ஜனாதிபதி தெரிவித்திருந்த கருத்தை ஒருசில எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இனவாத, மதவாதப் போக்கில் விமர்சித்துக்கொண்டு அதனை அரசியலாக்கும் நடவடிக்கையை காண்கிறோம். தொல்பொருள் விடயத்தை உலக நாடுகள் முகாமைத்துவ விடயமாகவே பார்த்து வருகின்றன.

அதற்குக் காரணம் தொல்பொருள்களின் பெறுமதியைப் பாதுகாத்துக் கொள்வதுடன் மக்களின் அன்றாட வாழ்க்கைக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் தொல்பொருள்களை முகாமைத்துவம் செய்துகொள்ள வேண்டும் என்பதே இன்று உலக நாடுகள் ஏற்றுக்கொண்டிருக்கும் நிலைப்பாடாகும்.

தொல்பொருள் இடங்களை நாங்கள் பாதுகாக்கவேண்டும். அதே நேரம் மக்களின் வாழ்க்கைக்கு அதன் மூலம் நன்மை கிடைக்கும் வகையை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். முக்கியமாக சுமார் 2 ஆயிரத்து 500 வருடங்கள் வரலாற்றைக்கொண்ட எமது நாட்டில் எந்தப் பிரதேசத்திலும் பெறுமதிமிக்க தொல்பொருள்கள் இருப்பதற்கு இடமிருக்கிறது. தொல்பொருள் இடங்களை நாட்டு வருமானத்தை அதிகரிக்கும் இடங்களாக மாற்றிக்கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும். எமது அரசாங்கத்தில் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் மூலம் கிடைத்த வருமானத்தில் கலாசார மத்திய நிலையத்தின் மூலம் 2 பில்லியன் ரூபா வழங்கி இருந்தோம். அந்தப் பணத்தின் மூலமே நாட்டில் விகாரைகள் மற்றும் ஏனைய மதஸ்தலங்களின் நிர்மாணங்களுக்கு பகிர்ந்தளித்தோம் - என்றார். (எ-இ)

# தமிழ்மக்களின் காணிகள் சிங்களவர்களால் அபகரிப்பு

## சார்ள்ஸ் எம்.பி. குற்றச்சாட்டு

வவுனியா - செட்டிகுளம், வீரபுரம் பகுதியில் தமிழ் மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய 250 ஏக்கர் காணி சிங்கள மக்களால் அபகரிக்கப்பட்டுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் குற்றஞ்சாட்டியுள்ளார். வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. அதிலேயே அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

1994ஆம் ஆண்டு செட்டிகுளம் பிரதேச செயலகத்துக்குட்பட்ட வீரபுரம் மக்களுக்காக 400 ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டு வாழ்வாதாரத்துக்காக ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஒரு ஏக்கர் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டு குடியமர்த்தப்பட்டார்கள். ஆனால் தற்போதுவரை அந்த மக்களுக்கு காணிகள் வழங்கப்படவில்லை. ஆனால் ஒதுக்கப்பட்ட காணிகளில் 75 வீதமான காணிகள் வவுனியா தெற்கு சிங்களப் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த பெரும்பான்மையின சிங்கள மக்களால் அபகரிக்கப்பட்டுள்ளன.

அதேவேளை, மதுராக நகரைச் சேர்ந்த பொது மக்கள் தெற்கு சிங்களப் பிரிவுக்குள் சென்று குடியேறுவதற்காக சிறுதுண்டு காணியைக் கேட்டபோது அந்தப்பகுதியிலுள்ள பிக்கு சம்மதித்தால் மட்டுமே வழங்கமுடியும் என்று மாவட்டச்செயலக மட்டத்தில் எனக்குப் பதில் வழங்கப்பட்டது. தற்போது 250 ஏக்கருக்கும் மேற்பட்ட காணிகளை பெரும்பான்மையின மக்கள் அபகரித்திருக்கின்றார்கள். வீரபுரம் மக்களுக்கு அந்தக் காணிகள் வழங்கப்படவேண்டும் - என்றார். (எ-110)

# எதிர்க்கட்சித்தலைவராக நாமல் பதவியேற்கலாம்!

## ஆரூடம் கூறுகின்றார் மரிக்கார்

கொழும்பு, ஜூன் 17

எதிர்க்கட்சித்தலைவர் பதவியை நாமல் ராஜபக்ச கைப்பற்றக்கூடும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பேச்சாளர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் மொட்டுக் கட்சியினருக்குமிடையிலான பிளவு அதிகரித்துச் செல்கிறது. கடந்த திங்கட்கிழமை ஜனாதிபதியுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் பெரும்பாலான மொட்டுக்கட்சி உறுப்பினர்கள் பங்குபற்றவில்லை. மொட்டுக்கட்சி செயலாளர் சாகர காரியவசத்தினூடாக அழைப்பு விடுக்காமல் ஜனாதிபதி நேரடியாக அழைப்பு விடுத்த காரணத்தாலேயே மொட்டுக் கட்சியினர் ஜனாதிபதியுடனான சந்திப்பில் கலந்து கொள்ளவில்லை.

ஜனாதிபதியின் செயற்பாடுகள் யாவும் தான்தோன்றித்தனமானவையாகவே காணப்படுகின்றன.

தாங்கள் அரசாங்கத்திலிருந்து வெளியேறினால் ரணில் தனித்து விடப்படுவார், அமைச்சுச் செயலாளர்களை வைத்துக்கொண்டு அவரால் ஆட்சி செய்ய முடியாது, நாடாளுமன்றத்தைக் கலைக்க வேண்டிய நிலை ஏற்படும் என மொட்டுக்கட்சியினர் நினைக்கின்றனர் - என்றார். (எ-6)

# பிக்கப் – மோ.சைக்கிள் நாவற்குழியில் விபத்து

## எவருக்கும் பாதிப்பு இல்லை

சாவகச்சேரி, ஜூன் 17

யாழ்ப்பாணம், நாவற்குழிச் சந்தியில் பிக்கப் வாகனமும் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன. விபத்தில் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை.

இந்த விபத்து கடந்த புதன்கிழமை இடம்பெற்றுள்ளது. கேரதீவு வீதியில் பயணித்த வடக்கு மாகாணசபையின் வாகனமும் யாழ்ப்பாணம் நோக்கி வந்த மோட்டார் சைக்கிளும் நாவற்குழிச் சந்தி வளைவில் திரும்புகையில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. (ச-ரி2-9)



# தமிழர்களை மீளக்குடியேற்றுவதில் அரசாங்கம் தொடர்ந்தும் அசமந்தம்

## ரவிகரன் குற்றச்சாட்டு

முல்லைத்தீவு மாவட்டத்தில் சிங்களக் குடியேற்றங்களை முன்னெடுப்பதில் அரசு காட்டுகின்ற ஆர்வம், தமிழ் மக்களை தமது பூர்வீக நிலங்களில் மீள் குடியேற்றுவதில் இருப்பதில்லை என மாகாணசபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண ஊடக அமையத்தில் நேற்றுமுன்தினம் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழர் தாயகத்தில் இன்று பல பகுதிகள் சிங்கள ஆக்கிரமிப்பால் நிறைந்துள்ளன. இது தொடர்பில் நான் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் எமது நாடாளுமன்ற உறுப்பினர்களின் கவனத்துக்கு விடயத்தைக் கொண்டுசென்று தொடர்ச்சியாகப் போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றேன். எமது பகுதிகள் பலவற்றில் இன்னமும் மீள் குடியேற்றம் நிகழ்ந்தபாடில்லை. குறிப்பாக, ஏற்கனவே தண்ணிமுறிப்பு கிராமம், ஆண்டான்குளம் கிராமம் என்பன கரைதுறைபற்று பிரதேச செயலாளர் பிரிவில் இன்றும் மீள் குடியேற்றப்படாது காணப்படுகின்றன. வெலிஓயா போன்ற சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்வதில் காட்டும் ஆர்வம், தமிழர்களை மீள்குடியேற்றுவதில் காட்டுவதேயில்லை.

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுமார் ஒரு இலட்சத்து 40 ஆயிரம் மக்கள் வசிக்கின்றனர்.

எனினும், 67 ஆயிரம் இராணுவத்தினர் அங்கு நிலைகொண்டுள்ளனர். அவ்வாறெனில் இரண்டு பொதுமக்களுக்கு ஓர் இராணுவம் என்ற விகிதத்தில் இராணுவம் முல்லைத்தீவில் நிலைகொண்டுள்ளது. இந்த அதீதமான இராணுவ நடவடிக்கையால்தான் எங்கள் நிலங்கள் பறிபோகின்றன. எங்கள் நிலங்கள் ஆக்கிரமிக்கப்படாதிருக்க நாம்தான் போராட வேண்டும். நாம் அனைவரும் ஒன்றிணைந்து தான் இந்தப் போராட்டத்தை மேற்கொள்ள வேண்டும் - என்றார். (ம-125)



# டொலர் ஏறுமுகம்

இலங்கை ரூபாவுக்கு நிகரான டொலரின் பெறுமதி நேற்றும் ஏற்றமடைந்தது.

அமெரிக்க டொலர் ஒன்றுக்கு நிகரான ரூபாவின் விற்பனை விலை 328.92 ரூபாவாகவும் கொள்வனவு விலை 311.60 ரூபாவாகவும் நேற்று பதிவாகியுள்ளது. (ம)

# வீதியில் ஆசிரியை குத்திக் கொலை

## காதலனைத் தேடும் பொலிஸார்

கொழும்பு, ஜூன் 17

பாடசாலை ஆசிரியை ஒருவர் பட்டப்பகலில் வீதியில் வைத்துக் கத்தியால் குத்திப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கொடூரச் சம்பவம் மாத்தறை, ஊருபொக்க தொலமுல்ல பிரதேசத்தில் +கடந்த புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

ஆசிரியை பாடசாலை முடிந்து வீடு சென்று கொண்டிருந்த போதே கொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. உயிரிழந்த ஆசிரியை 26 வயதுடையவர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவரது காதலன் இந்தக் கொலையைச் செய்திருக்கலாம் என்று சந்தேகிக்கும் பொலிஸார் அவரைத் தேடும் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். (ஓ-22)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழில் பினாமிகளின் பெயரில் சீனக் கடலட்டைப் பண்ணைகள்

## இந்தியா தடுக்க வேண்டுமென யாழ்.கடற்றொழிலாளர் சமாசத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 17

**யாழ்.மாவட்டத்தில் பினாமிகளின் பெயரில் சீனக் கடலட்டைப் பண்ணைகள் இயங்குகின்றன. வடக்கு கடற்றொழிலையும் மீனவ மக்களையும் அந்நியப்படுத்துவதற்காக இலங்கை அரசாங்கம் திரைமறைவில் மேற்கொள்ளும் இந்த முயற்சிகளை இந்தியா தலையிட்டு தடுத்து நிறுத்தவேண்டும். இவ்வாறு யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்களின் சம்மேளனத் தலைவர் அன்னலிங்கம் அன்னராசா தெரிவித்தார்.**

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:

யாழ். மாவட்டத்தில் சீனக் கடல் அட்டைப் பண்ணைகள் பினாமிகளின் பெயரில் இயங்குகின்ற நிலையில், சீனாவில் இல்லாத நிறுவனம் இலங்கையிலிருந்து சீனக் கடல் அட்டைகளை ஏற்றுமதி செய்வதற்காக இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ளது எனக் கொழும்பு ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது. இந்தநிலை தொடருமாயின் கடற்றொழிலை நம்பி வாழும் மீனவ மக்கள் தமது வாழ்வாதாரத் தொழிலை இழக்கநேரிடும்.

ஆகவே வடக்கில் இடம்பெறும் சீனக் கடல் அட்டைப் பண்ணையால் மக்கள் எதிர்கொள்ளும் பாதிப்புகளை இந்தியப் பிரதமர் தலையிட்டு உரிய தீர்வு வழங்க வேண்டும் - என்றார். (ச-27)

## கைது

யாழ்ப்பாணம், ஜூன் 17

திருநெல்வேலி காளிகோவில் பகுதியில் வாளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். வாளை வைத்திருந்த குற்றச்சாட்டில் 25 வயதான இளைஞர் கைதுசெய்யப்பட்டார். (ச-125)

**A/C விற்பனைக்கு**

LG வீட்டு A/C விற்பனைக்கு.
12.000 BTU. 80,000/=
T.P:077 179 2577

**வீடு வாடகைக்கு உண்டு**

யாழ். இந்து கல்லூரி. யா/ இந்து ஆரம்ப பாடசாலைகளுக்கு அண்மித்து சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
T.P:0777 222 130

**நாய்க்குட்டிகள் விற்பனை**

நல்ல இன டோமன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.
வி.கபிலன்
077 064 1113
(CS/60857)AH-1



**சுத்திகரிப்பாளர் தேவை**

யாழ். நகரில் இயங்கும் எமது நிறுவனத்திற்கு **சுத்திகரிப்பாளர்** தேவை.
தகுதியானவர்கள் இன்று (17.06.2023) சனிக்கிழமை, நாளை (18.06.2023) ஞாயிற்றுக்கிழமை கீழ்வரும் முகவரிக்கு நேரில் சமுகம் தரவும்.
உதயன்
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

# சிவப்பிரகாச வித்தியில் மாணவர் நாடாளுமன்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 17

வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயத்தில் மாணவர் நாடாளுமன்றம் நேற்று வெள்ளிக்கிழமை பாடசாலை அதிபர் இ.சிறிதரன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது சபாநாயகர், பிரதி சபாநாயகர் உட்பட்ட நாடாளுமன்ற பதவிகளுக்கான தெரிவு, ஏற்கனவே தெரிவு செய்யப்பட்ட மாணவர் நாடாளுமன்ற உறுப்பினர்களால் முன்னெடுக்கப்பட்டது. தொடர்ந்து கருத்தாடல்களும் இடம் பெற்றன.

நிகழ்வில் வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஜமுனா ராஜசீலன், வலிகாமம் கல்வி வலய கல்விப் பணிப்பாளர் சமூக விஞ்ஞானம் திருமதி லதிஸ்கிரேஸ் விக்ரர் ஜெயகுமார், பழைய மாணவர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-

**நல்லூர்க் கந்தன் திருமண சேவை**

எம்மிடம் எல்லா இனத்தவர்கள் உத்தியோகம் உள்நாடு, வெளிநாடு அரச சார்பற்றவர்களுக்கும் மணமகன்கள் மணமகள்கள் உண்டு. நீங்கள் விரும்பியவாறு தெரிவு செய்து விரைவாக தரப்படும்.
தொடர்பு:**வீ.ஜெயந்தி**
077 9733 183
(CS 25262)A-1

**வீடு வாடகைக்கு**

யாழ்ப்பாணம் சுண்டிக்குளி சனசமூக நிலையத்திற்கு அருகாமையில் 4 அறைகள் மற்றும் பிரத்தியேக காரியாலய அறையுடன் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு விடப்படும். வாகன தரிப்பிட வசதி உண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
077 971 5044

# உரிமங்கள் பெறும் நடமாடும் சேவை!

கிளிநொச்சி, ஜூன் 17

பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் வருமான அறவீடுகள் தொடர்பான நடமாடும்சேவை வட்டார ரீதியாக கடந்த செவ்வாய்க்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 23ஆம் திகதி வரை இடம்பெறும் இந்த நடமாடும் சேவையில், வியாபார உரிமம், வரி வழங்கல், கட்டட அனுமதிக்கான விண்ணப்பங்கள், சைக்கிள் உரிமம் மற்றும் நாய் உரிமம் போன்றவற்றைப் பெற்றுக்கொள்ளமுடியும் என சபையின் செயலாளர் திருமதி த.தயானந்தன் அறிவித்துள்ளார்.

இன்று சனிக்கிழமை தம்பகாமம் வட்டார மக்களுக்கு தம்பகாமம் கிராமஅலுவலர் அலுவலகத்திலும், 20ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முகாவில் கண்ணன் சனசமூக நிலையத்திலும் 21ஆம் திகதி புதன்கிழமை கிளாலி கிராமஅலுவலர் அலுவலகத்திலும், 22ஆம் திகதி வியாழக்கிழமை சோரன்பற்று வட்டார மக்களுக்கு தர்மக்கேணி கிராமஅலுவலர் அலுவலகத்திலும், 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை முகமாலை கிராமஅலுவலர் அலுவலகத்திலும் நடமாடும்சேவை இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-9)

THE HALO TRUST

450 Thirunagar West
Kilinochchi
Sri Lanka

T: +94 (0) 212 285 466
vanni@halosrilanka.org
mail@halosrilanka.org
www.halotrust.org

**வாகனங்களை குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரல்**
(Quotation for vehicle hiring on contract basis )

ஹலோ ட்றஸ்ட் ஆனது ஐக்கிய இராச்சியத்தைத் தளமாகக் கொண்டு உலகளா விய ரீதியில் 25 நாடுகளில் இயங்கிக் கொண்டிருக்கின்றது. இலங்கை யில் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் யாழ்ப்பாணம் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் மிதிவெடிகள் மற்றும் வெடிக்கத்தக்க பொருட்களை அகற்றும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றது.

ஹலோ நிறுவனம் கீழ்வரும் வாகனங்களை குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**2. Toyota Hiace**

ஹலோ நிறுவன ஊழியர்களை யாழ்ப்பாண அலுவலகத்திலிருந்து கிளிநொச்சி அலுவலகத்திற்கும் கிளிநொச்சி அலுவலகத்திலிருந்து யாழ்ப்பாண அலுவலகதிற்கும் போக்குவரத்து செய்வதற்காக சொகுசு ரக வான் மாதாந்த குத்தகை அடிப்படையில் சாரதி மற்றும் எரிபொருள் இல்லாமல் பின்வரும் விபரங்களுடன் விண்ணப்பித்தல் வேண்டும்.

- Toyota Hiace விரும்பத்தக்கது
- 10 பேருக்கான இருக்கைகள் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்
- முழுக் காப்புறுதி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்
- வாகன உற்பத்தியானது 2002ம் ஆண்டுக்குப் பின்னராக இருத்தல் வேண்டும் (ஆங்கில இலக்கம்)

விலைகோரும் படிவங்களை எதிர்வரும் 24 யூன் 2023 அன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**மனிதவள முகாமையாளர்**
**ஹலோ ட்ரஸ்ற் - இலங்கை**
**450, திருநகர் மேற்கு, கிளிநொச்சி.**
**16.06.2023**
(CR/40144)AH-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மின்கட்டணத்தில்....

சார சபைத் தலைவர் நளிந்த இலங்கக்கோன் தெரிவித்துள்ளார். ஜூலை முதலாம் திகதி முதல் மின்சாரக் கட்டணத்தை 3 சதவீதத்தால் குறைப்பதற்கு மின்சாரசபை திட்டமிட்டிருந்தது. எனினும் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் அனுமதியின்றி மின்கட்டணத்தை குறைக்க முடியாது. பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவரான இருந்த ஜனக ரத்நாயக்க நாடாளுமன்றத் தீர்மானத்தின் மூலம் அண்மையில் பதவிநீக்கப்பட்டிருந்தார். அவருடைய இடத்துக்கு இன்னமும் பிறிதொருவர் நியமிக்கப்பட வில்லை.

இந்த நிலையிலேயே பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் அனுமதி இல்லாததால் மின்கட்டணத் தைக் குறைக்க முடியாது என்று மின்சாரசபைத் தலைவர் நளிந்த இலங்கக்கோன் தெரிவித்துள்ளார். (அ-ம-6)

## அநுராதபுர...

வவுனியா மாவட்ட எல்லை நிர்ணயம் தொடர்பான கலந்துரையாடலொன்று, வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. இதன்போது தேசிய எல்லை நிர்ணய ஆணைக் குழுவால் பரிந்துரை செய்யப்பட்டு முன்மொழியப்பட்ட விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டன.

போர் முடிந்த பின்னர் வவுனியா வடக்கின் எல்லைப் பகுதிகளில் பெரும் காடுகள் அழிக்கப்பட்டு அரசின் ஆதரவுடன் ஏற்படுத்தப்பட்ட பெரும்பான்மையின குடியேற்றங்களின் நிர்வாகச் செயற்பாடுகளை வவுனியா மாவட்டத்துடன் இணைத்து முன்னெடுப்பதற்காக அவதானம் செலுத்துமாறு எல்லை நிர்ணய ஆணைக்குழுவால் வவுனியா மாவட்ட நிர்வாகத்துக்கு அனுப்பப்பட்ட முன்மொழிவு தொடர்பிலும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

போகஸ்வெவ1,போகஸ்வெவ2, வெகரதென்ன, கம்பிலிவெவ, நாமல்கம, நந்திமித்திரகம, சலினிகம ஆகிய கிராமங்களை சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள், தாங்கள் அநுராதபுர மாவட்டத்தின் நிர்வாகத்தின் கீழ் இருப்பதால் அரச நிர்வாகச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு நீண்ட தூரம் பயணிக்க வேண்டியிருப்பதுடன் பல்வேறு அசௌகரியங்களையும் சந்தித்து வருவதாகவும், எனவே எம்மை வவுனியா மாவட்ட நிர்வாகத்து டன் இணைப்பதற்கான நடவடிக்கை ஒன்றை முன்னெடுக்குமாறு எல்லை நிர்ணய ஆணைக்குழுவுக்கும், ஜனாதிபதி செயலகத்துக்கும் தெரியப்படுத்தியுள்ளதன் அடிப்படையிலேயே இது தொடர்பில் தற்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பில் நேற்று ஆராய்ந்த வவுனியா மாவட்ட நிர்வாகம், அந்தப் பகுதிகளை வவுனியா மாவட்டத்துக்குள் உள்ளீர்ப்பது தொடர்பில் சாதகமாகப் பரிசீலிக்க முடிவெடுத்துள்ளது.

பல்வேறுபட்ட எதிர்ப்புக்களையும் மீறி அநுராதபுரத்தின் எல்லைப் பகுதிகளில் இந்தச் சிங்களக் குடியேற்றங்கள் அமைக்கப்பட்டன. இந்தக் குடியேற்றங்கள் வவுனியா மாவட்டத்துடன் இணைப்பதற்காக மேற்கொள்ளப்படும் சூழ்ச்சி என்று அப்போதேயே சுட்டிக்காட்டப் பட்டது.

இந்த நிலையில், தற்போது நிர்வாக நடைமுறைச்சிக்கல்களைக் காரணமாகக் காண்பித்து அந்தக் கிராமங்கள் வவுனியாவுடன் இணைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-110)

## வவுனியாவில்....

அழைத்துச் செல்வதற்காகக் காத்திருந்த அவருடைய தாயாருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர். வவுனியா கன்னாட்டிப் பகுதியிலேயே இந்தக் கோரவிபத்து இடம்பெற்றுள்ளது.

பேருந்துக்காகக் காத்திருந்தபோது, வேகக்கட்டுப்பாட்டை இழந்த ஹன்டர் ரக வாகனமொன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து அவர்கள் மீது மோதியது என்றும், பிறிதொரு சிறுவன், வாகனம் வேகக்கட்டுப்பாட்டை இழந்து வருவதை அவதானித்து அங்கிருந்து ஓடித் தப்பித்துக்கொண்டான் என்றும் விபத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர். சம்பவத்தில் அதேபகுதியைச் சேர்ந்த சிவலோகநாதன் சுபோகினி (வயது -36), விதுசிகா (வயது- 6) ஆகியோரே உயிரிழந்தவர்களாவர்.

விபத்தை ஏற்படுத்திய ஹன்டர் ரக வாகனத்தில் மூவர் இருந்தபோதிலும், அவர்களில் ஒருவர் தப்பியோடியுள்ளார்.

வாகனத்தில் இருந்த இருவரையும் ஊர்மக்கள் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். விபத்தால் ஆவேசமடைந்த மக்கள், விபத்தை ஏற்படுத்திய வாகனத்தை சரமாரியாகத் தாக்கிச் சேதப்படுத்தியதுடன், அந்த வாகனத்தை எரிப்பதற்கும் முற்பட்டனர். இதையடுத்து பொலிஸார் விரைந்து செயற்பட்டு வாகனத்தை தீக்கிரை யாக்காமல் பார்த்துக்கொண்டனர். சடலங்கள் வவுனியா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டன.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ-ம110)

## கனடாவில்...

பாதுகாப்புத் தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழு அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

தேசியப் பாதுகாப்புத் தொடர்பான துறைசார் மேற்பார்வைக்குழு, அதன் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சரத் வீரசேகர தலைமையில் நாடாளுமன்றத்தில் அண்மையில் கூடியது. இதன்போதே அந்தக் குழுவால் இவ்வாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான இலங்கையின் நிலைப்பாட்டை அந்த நாடுகளின் அரசாங்கங்களுக்கு தூதுவர்கள் ஊடாகவும் உயர்மட்ட இராஜதந்திர பேச்சுக்களின் ஊடாகவும் வலுவாகத் தெரிவிக்கப்பட்டிருப்பதாக வெளிவிவகார அமைச்சின் செயலாளர் சுட்டிக்காட்டினார். இவ்வாறான முடிவுகளை மறுபரிசீலனை செய்ய சம்பந்தப்பட்ட அரசுகளுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த நாட்டின் இராணுவ உறுப்பினர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள பயணத்தடையை எதிர்ப்பதற்குத் தேவையான அனைத்து உண்மைகளையும் சேகரித்து உரிய தூதுவர்களிடம் வழங்குமாறு வெளிவிவகார அமைச்சின் செயலாளருக்குக் குழுவினால் பணிப்புரை விடுக்கப்பட்டது. அத்துடன், இலங்கை ஒரு சர்வதேச இராணுவ மோதலைக் கொண்டிராத நாடு என்பதால் இவ்வாறு பயணத்தடை விதிப்பது ஜெனிவா உடன்படிக்கைக்கு எதிரானது என்ற விடயத்தை வலியுறுத்துமாறும் குழுவின் தலைவர் தெரிவித்தார். (அ-ம)

# உசுப்பேற்றுவது உதயனா? அமைச்சரா?

யாழ்ப்பாணம், ஜூன் 17

கடந்த காலங்களில் மக்களை உசுப்பேற்றும் கருத்துக்களால் போதையூட்டி தவறாக வழிநடத்திய பத்திரிகையொன்று, 'அமைச்சர் போதைப்பொருள் வியாபாரிகளிடம் பணம் பெற்றார்' என்று தலைப்புச் செய்தியாக இன்று (நேற்றுப் புதன்கிழமை) வெளியிட்டிருக்கின்றது. அந்தப் பத்திரிகை இவ்வாறு உசுப்பேற்றி மக்களைத் தவறாக வழிநடத்துவதை அதன் பிரதம ஆசிரியராக இருந்த ஒருவர் தனது பிறந்தநாள் விழாவிலேயே ஒத்துக்கொண்டிருந்தார். அப்படியான பத்திரிகைதான் இப்போது இந்தச் செய்தியையும் வெளியிட்டு மக்களைத்தவறாக வழிநடத்த முற்படுகின்றது. கடந்த சில வருடங்களுக்கு முன்னர், நாடாளுமன்ற உறுப்பினரொருவர் நடாளுமன்றத்தில் என்னைப்பற்றி பேசாத விடயங்களை அங்கு பேசியதாகக் குறிப்பிட்டு செய்தி வெளியிட்டிருந்தது. இது தொடர்பில் நான் உடனடியாக நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்ததையடுத்து அந்தப் பத்திரிகை நீதிமன்றத்தின் ஊடாக எனக்கு நஷ்டஈட்டையும் வழங்கியிருந்தது என்பதை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். இவ்வாறு உதயன் பத்திரிகை மீது, நேற்று நடைபெற்ற கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் நூற்றாண்டு ஆரம்ப விழாவில் கலந்து கொண்டு மறைமுகமாகப் பொரிந்து தள்ளியுள்ளார் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

அமைச்சர் போதைப்பொருள் விற்றவர்களிடம் பணத்தைப் பெற்றுக்கொண்டதை ஒப்புக் கொண்ட செய்தி உதயன் பத்திரிகையிலேயே நேற்று பிரதான செய்தியாக இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆசிரியர் விளக்கம்

1. உதயன் எக்காலத்திலும் உண்மைகளை மக்களிடம் கொண்டுசெல்பவனே தவிர ஒருபோதும் மக்களை உசுப்பேற்றுவதில்லை. தமக்கு விரும்பாத அல்லது தமக்கு எதிரான கருத்துக்களை சகித்துக்கொள்ளாமல் கொலையாளிகளை ஏவிவிடும் துணை ஆயுதக்குழுக்களின் அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் உதயன் உண்மையை உரத்துச்சொல்லத் தயங்கியதில்லை. தனக்குப் பிடிக்காத கருத்துக்கள் வந்தால் அமைச்சர் டக்ளஸ் உதயன் மீது உசுப்பேற்றும் பத்திரிகை என்று வசைமாரிபொழிந்துதிருப்திப்பட்டுக்கொள்வது வழக்கமே. அமைச்சர் சொல்லியவற்றை மட்டுமே உதயன் செய்தியாக வெளியிட்டிருந்ததே தவிர, வேறெதனையும் புனையவில்லை. அப்படியானால் அமைச்சர்கூறியதுபோல அவரது செய்தி மக்களை உசுப்பேற்றும் தன்மை கொண்டதெனில் அந்தக் கருத்தை வெளியிட்ட அமைச்சர்தான் அதற்குப் பாத்திரவாளி.

2. உதயனின் பிரதம ஆசிரியராக இருந்தவர் மறைந்த ம.வ.கானமயில்நாதன் அவர்கள் மட்டுமே. அவர் ஒருபோதும் தனது பிறந்த தினத்தை கொண்டாடியதுமில்லை. உதயன் உசுப்பேற்றும் பத்திரிகையென்று சொல்லியதுமில்லை.

3. உதயன் மீது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வழக்குத் தொடர்ந்துள்ளபோதிலும், அந்த வழக்கு ஒருமுகமாக தீர்க்கப்பட்டு அதே நீதிமன்றமே அந்தத் தீர்ப்பை இடைநிறுத்தி மீண்டும் இருமுகமாக விசாரணை மேற்கொண்டு வருகின்றது. அமைச்சர் சொல்லியதுபோல நீதிமன்றத்தின் ஊடாக அவர் நஷ்டஈட்டை பெற்றுக்கொள்ளவில்லை. நீதி மன்றத்தை தவறாக வழிநடத்தும் வகையில் அமைச்சர் கருத்தை வெளியிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (ஆ-ர்)

# இளைஞன் மீது வாள்வெட்டு!

### பட்டப்பகலில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூன் 17

யாழ்ப்பாணம் இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டச்சு வீதியில் நேற்றுக்காலை இளைஞர் ஒருவர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த இளைஞன் மீதே, இரு மோட்டார்சைக்கிளில் வந்த ஆறு பேரைக் கொண்ட குழுவினரால் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. காயமடைந்த இளைஞர் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். இது தொடர்பில் மல்லாகம் தெற்குப் பகுதியைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞர் ஒருவர் சந்தேகத்தின் அடிப்படையில் நேற்று மதியம் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று இளவாலைப் பொலிஸார் தெரிவித்தனர். (ம-125)

# தமிழ் எம்.பி.க்களை முடிந்தால் கைதுசெய்க

### சரத் வீரசேகரவுக்கு செல்வம் எம்.பி. சவால்

வவுனியா, ஜூன் 17

சரத்வீரசேகர கடற்படையில் ரொட்டி சுட்டுக்கொண்டா இருந்தார்? முடிந்தால் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை கைதுசெய்து காட்டுங்கள் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ரெலோ அமைப்பின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் பின் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னாள் அமைச்சர் சரத்வீரசேகர கடந்த காலங்களில் பல கருத்துக்களை கூறியுள்ளார். குறிப்பாக தமிழ் பிரதேசங்களில் நடைபெறுகின்ற அடக்குமுறைக்கு எதிராக குரல் கொடுக்கின்ற தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை கைதுசெய்து சிறையில் அடைக்க வேண்டும் என்று சொல்லியிருக்கின்றார். மாகாணசபை முறையையும் இல்லாது ஒழிக்க வேண்டும் என்றும் கோரிக்கை முன்வைத்துள்ளார். சரத் வீரசேகர கடற்படையில் ரொட்டி சுட்டுக்கொண்டா இருந்தார்? ஏனெனில் எங்களது மக்களது பிரச்சினை என்பது காலம்காலமாக இருந்துவரும் பிரச்சனை. தங்களது பிரச்சினைகளைப் பேசுவதற்கே மக்கள் எங்களை நாடாளுமன்றம் அனுப்புகிறார்கள். எனவே தமிழ் மக்களின் பிரச்சினைகளை நாங்கள் பேசுவோம். எங்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராகக் குரல் கொடுப்போம். தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை கைதுசெய்து சிறையில் அடைக்கச் சொல்வதற்கு இவருக்கு என்ன உரிமை இருக்கிறது? முடிந்தால் அதை செய்து பார்க்கட்டும் என்றார். (அ-ம-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயணிகள்...

காங்கேசன்துறை துறைமுகத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பயணிகள் கப்பல்களுக்கான நவீன முனையம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

பல மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட முனையத்தை இன்று திறந்து வைத்துள்ளோம். இந்தியாவின் காரைக்காலுக்கும், காங்கேசன்துறைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவையை ஆரம்பிப்பதற்கான வேலைகளை முன்னெடுத்து வருகின்றோம். அது எப்போது முடியும் என்று கூற முடியாது. அது இந்த ஆண்டு இறுதியாக இருக்கலாம் அல்லது அடுத்த ஆண்டாக இருக்கலாம். அந்தப் பணிகள் முடிந்ததும் சேவை ஆரம்பிக்கப்படும்- என்றார்.

திறப்பு விழாவில், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மற்றும் அரச அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (அ-ம-ஒ.5,125,27)

## காங்கேசன்துறையை...

வாகியது.

இந்தக் கப்பலை அமைச்சர்களான நிமால் சிறிபால டி சில்வா, டக்ளஸ் தேவானந்தா, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இந்தியத் துணைத்தூதரகத்தின் கொன்சியூலர் ஜெனரல் ராகேஷ் நட்ராஜ் ஆகியோர் வரவேற்றனர். சென்னையிலிருந்து புறப்பட்ட 'கோடில்லா எம்பிரஸ்' சொகுசுக் கப்பல் கடந்த 7ஆம் திகதி அம்பாந்தோட்டை துறைமுகத்தை வந்தடைந்தது. அங்கிருந்து புறப்பட்டு 9ஆம் திகதி திருகோண மலையை வந்தடைந்தது. இறுதியாக நேற்றையதினம் காங்கேசன்துறை துறைமுகத்தை கப்பல் வந்தடைந்தது.

இந்தக் கப்பல் காங்கேசன்துறை துறைமுகத்தின் கரையை வந்தடையவில்லை. கரைப் பகுதி ஆழமாக இல்லாமையால் இன்னொரு படகு மூலமே சொகுசுக் கப்பலிருந்தவர்கள் காங்கேசன்துறை முனையப்பகுதியை வந்தடைந்தனர். கப்பலில் சுற்றுலாவிகள் 519 பேரும், கப்பல் பணியாளர்கள் 570 பேரும் இருந்தனர்.

இந்தக் கப்பலினுள் சொகுசுக் ஹோட்டலின் வசதிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு திங்கட்கிழமையும் சென்னையிலிருந்து புறப்பட்டு புதன்கிழமைகளில் அம்பாந்தோட்டையிலும், வியாழக்கிழமைகளில் திருகோண மலை யிலும், வெள்ளிக்கிழமைகளில் காங்கேசன்துறையிலும் பயணிகளுடன் வந்தடைந்து. பிரதி வெள்ளிக்கிழமை மாலை தோறும் காங்கேசன்துறையிலிருந்து மீண்டும் சென்னை நோக்கிப் பயணிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ.5)

## யாழ்.மாணவர்கள்...

ளாக நேற்று மீட்கப்பட்டுள்ளனர்.

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தின் மூன்றாம் வருட மாணவனான அபிநஜன் (வயது -23), பேராதனைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பொறியியல் பீடத்தில் இரண்டாம் வருட மாணவனான ந.குகதீஸ் (வயது-22) ஆகியோரே இவ்வாறு சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை நாரந்தனை வடக்கு பகுதியைச் சேர்ந்த விக்னேஸ்வரன் அபிநஜன் பொரலஸ்கமுவ கட்டுவல பிரதேசத்தில் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தால் வாடகை அடிப்படையில் எடுக்கப்பட்ட மாணவர் விடுதியின் தரைத்தளத்தில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார். அவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்திருக்கலாம் என்று பொலிஸாரின் முதற்கட்ட விசாரணையின் அடிப்படையில் தெரிவித்தனர்.

அதேபோல், யாழ்ப்பாணம், வரணியைச் சேர்ந்த ந.குகதீஸும் தவறான முடிவெடுத்து உயிரிழந்திருக்கலாம் என்று பொலிஸாரின் முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. ஒரேநாளில் இருவேறு பல்கலைக்கழகங்களில் பொறியியல்பீடத்தில் பயிலும் யாழ். மாவட்ட மாணவர்கள் இவ்வாறு உயிரை மாய்த்த சம்பவம் மாணவர்களிடையே பெரும் அதிர்வலைகளைத் தோற்றுவித்துள்ளது. (அ-ம-22,125)

## வெலிஓயா...

காலங்களில் முல்லைத்தீவு மாவட்டத்துக்குள் உள்ளீர்க்கப்படுவார்கள் என்று தெரியவருகின்றது.

வெலிஓயா பிரதேசசெயலகம் முல்லைத்தீவு மாட்டத்தின் நிர்வாகத்துக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், நிலப்பரப்பும் முல்லைத்தீவின் எல்லையினுள் அமைந்துள்ளது.

எனினும் கடந்த முறை இடம்பெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் அந்தப் பகுதியை சேர்ந்த மக்கள் வவுனியா வடக்கு பிரதேசசபைக்கே தமது வாக்கினை அளித்தனர். எனவே புதிய எல்லை நிர்ணயத்தில் குறித்த மக்களை முழுமையாக முல்லைத் தீவுடன் இணைக்குமாறு முல்லைத்தீவு நிர்வாகத் தால் கோரப்பட்டிருந்து. இது தொடர்பாக வவுனியாவில் நேற்று இடம்பெற்ற புதிய எல்லை நிர்ணயம் தொடர்பான கலந்துரையாடலில் கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

அதனடிப்படையில் நிக்கவெவ வலது, நிக்கவெவ இடது, கஜபாபுர, கல்யாணபுர கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கிய வெலிஓயா பிரதேச செயலாளர் பிரிவின் 2 ஆயிரத்து 233 குடும்பங்களை புதிய எல்லை நிர்ணயத்தினூடாக முல்லைத்தீவுக்குள் இணைப்பதற்கு பரிசீலிக்கப்பட்டுள்ளது. (அ-ம-110)

## கடல் பக்கமாகவே...

இந்தத் தகவலை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளு மன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்தி ரன் தெரிவித்தார்.

துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தலைமையிலான குழுவினர் யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை தந்தனர். காங்கேசன்துறை துறைமுகத்தின் பயணிகள் கப்பல்களுக்கான நவீன முனையத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்ட அவர்கள், பலாலியிலுள்ள யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தையும் சென்று பார்வையிட்டனர்.

விமான நிலையத்தின் தற்போதைய தேவைக்குரிய கட்டடங்கள் மற்றும் ஏனைய வசதிகளை உடனடியாகப் பூர்த்தி செய்வதற்கு இலங்கை அரசாங்கம் நிதி ஒதுக்கும் என்று அமைச்சர் நிமால் இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

விமான ஓடுபாதையின் விரிவாக்கம் தொடர்பிலும் ஆராயப்பட்டுள்ளது. விமானத்தின் ஓடுபாதை 900 மீற்றர் விரிவுபடுத்தவேண்டிய தேவையுள்ளது. அதில் 500 மீற்றர் கடல் பக்கமாகவும் மற்றைய 400 மீற்றரை தரைப் பக்கமாகவும் முன்னெடுக்க முதலில் ஆலோசிக்கப்பட்டது. அவ்வாறு செய்ய முற்பட்டால் தரைப்பக்கமாக அதிகளவு காணிகள் சுவீகரிக்கப்படவேண்டிவரும் என்பதுடன், வல்லை -அராலி வீதி முழுமையாக மூடப்படும் நிலையும் ஏற்படும். ஆனால் கடல்பக்கமாகவே 900 மீற்றரையும் விரிவாக்குவதன் ஊடாக காணிகளை மேலதிகமாக சுவீகரிக்கப் படவேண்டிய தேவை ஏற்படாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார். இதனையடுத்து கடல்பக்கமாகவே 900 மீற்றரையும் விரிவாக்கத் தீர்மானிக்கப் பட்டுள்ளது. இந்திய நிதியுதவி கிடைத்ததும் புனரமைப்புப்பணியை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட் டுள்ளது.

மேலும் தற்போதுள்ள ஓடுபாதையிலும் சீரற்றிருக்கும் 900 மீற்றர் நீளமான பகுதியையும் முழுமையாகப் புனரமைக்க வேண்டியுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதுவும் புனரமைக்கப்பட்டு, மேலதிகமாக 900 மீற்றர் விரிவாக்கம் செய்யப்பட்டால் சர்வதேச விமானங்கள் பலாலியில் தரையிறங்கும் வாய்ப்பு ஏற்படும் என்று நேற்றைய கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


இந்தச் சந்திப்பில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ். மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரன் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர். (அ-ஒ.5)

## வயோதிபப் ...

அந்த வயோதிபப் பெண், மறவன்குளப் பகுதியில் உள்ள தனது வீடுநோக்கிச் சென்றுகொண்டிருந்த போது, வேகக் கட்டுப்பாட்டை இழந்த ஓட்டோ, அருகிலுள்ள பாலத்துக்குள் வீழ்ந்து விபத்துக்கு உள்ளானது. சம்பவத்தில் படுகாயமடைந்த அந்தப் பெண் வவுனியா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டபோது சிகிச்சை பயனளிக்காமல் உயிரிழந்தார். இந்த விபத்தில் மேலும் இருவர் காயமடைந்தனர். இறப்புத்தொடர்பான விசாரணைகளை ஈச்சன்குளம் பொலிஸார் மேற்கொண்டனர். (அ-ம-110)

# மரண அறிவித்தல்

தாய் மடியில் • 14 • 05 • 1945



இறைவன் அடியில் • 14 • 06 • 2023

## திரு.மயில்வாகனம் மகேந்திரன் (மகம்)

(முன்னைநாள் உரிமையாளர் டில்க்கா ஸ்ரூடியோ - யாழ்ப்பாணம்)

'துவாரகை' அம்பலவாணர் வீதி, உடுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், சேர்.பொன் இராமநாதன் வீதி, உடுவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட திரு.மயில்வாகனம் மகேந்திரன் (மகம்) (முன்னைநாள் உரிமையாளர் டில்க்கா ஸ்ரூடியோ - யாழ்ப்பாணம்) கடந்த (14.06.2023) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனம் நாகம்மா தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் அன்னபூரணி தம்பதியரின் அன்பு மருமகனும், கலாரஞ்சிதம் (இளைப்பாறிய விரிவுரையாளர், பலாலி கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை) அவர்களின் பாசமிகு கணவரும், ஆதவன், துளசி ஆகியோரின் பாசமிகு தந்தையும், நிலானி, இராகுலராஜ் ஆகியோரின் அன்பு மாமனாரும், காருண்யன், விதுரன், பைரவி ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் Dr. மகேசன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற செல்வராஜா (சித்தியார்) மற்றும் நாகேஸ்வரி, குலரஞ்சிதம், சிவகுமார், ஜெயரஞ்சிதம், பாலகுமார் (விஜி) ஆகியோரின் அன்பு மைத்துனரும், யுவீந்திரா, நளினி, வதனி, சாகித்யன், தாட்சாயினி, சாரங்கன் ஆகியோரின் மாமனாரும், தயாளினி, Dr. தீனதயாளன், தயாகரன், வாணி, ரமேஸ், அகிலன், அபிராமி ஆகியோரின் பாசமிகு சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.06.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக முற்பகல் 11.00 மணியளவில் பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

T.P.: 021 224 0692
077 652 5446

தகவல்:
குடும்பத்தினர்

cs.44723) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்தி இலக்கை எட்ட கல்வித் தரத்தை உயர்த்துக

## ஜனாதிபதி பணிப்பு

நாட்டிலுள்ள அரசமற்றும் தனியார் பாடசாலைகளின் கல்வித் தரத்தை தொழில்நுட்பத்துடன் இணைத்து முன்னோக்கி மேம்படுத்திக் கொண்டுசெல்ல புதிய பொறிமுறையை வகுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 2048ஆம் ஆண்டில் அபிவிருத்தியடைந்த நாடு என்ற இலக்குகளை அடைவதற்கு முறையான கல்வி முறைமை மற்றும் பயிற்சி பெற்ற பணியாளர்கள் நாட்டுக்குத் தேவை. நாட்டை பிராந்தியக் கல்வி மையமாக மாற்றும் நோக்கில் எனது தலைமையில் 10 உறுப்பினர்களைக் கொண்ட 'கல்வித்துறை அமைச்சர் குழு' நியமிக்கப்பட்டுள்ளது. அதற்கு ஒத்துழைப்பு வழங்க உபகுழு நியமிக்கப்பட்டுள்ளது. இவை தொழில்நுட்பத்துடன் கூடிய கல்வியுடன் பாடசாலை முறையின் தரத்தைப் பேணவேண்டும். பாடசாலை மாணவர்களின் ஆங்கில அறிவை மேம்படுத்துவதற்கு கவனம் செலுத்த வேண்டும். அரசமற்றும் தனியார் பாடசாலைகளின் தரத்தை மேம்படுத்து வதற்காக ஆய்வு அலுவலகங்களைச் செயற்படுத்த வேண்டும். எதிர்காலச் சவால்களை முறியடித்து நாட்டில் பயிற்றுவிக்கப்பட்ட பணியாளர்களை உருவாக்கி சிறந்ததொரு எதிர்கால சந்ததியை கட்டியெழுப்புவதற்கு கல்வி முறையில் சிறந்த பொறிமுறையைத் தயாரிக்க வேண்டும் - என்றார்.

(ச-இ)


### O/L - A/L - வரலாறு

தனி /குழு வகுப்புக்கள்

- மீட்டல் வகுப்புக்கள்
- கட்டுரை வினாக்கள்
- படம் குறித்தல்
- MCQ Paper Classes

P. லக்ஷன்
T.P.:077 482 5438

### சிறுநீரகம் தேவை

O+ அல்லது O- வகையைச் சேர்ந்த சிறு நீரகம் தேவை.

தொடர்பு: 077 33 500 49
077 77 669 76

### வேலைவாய்ப்பு

பரந்தன், முல்லை சாலையில் அமைந்துள்ள வை.எம்.சி.ஏ (YMCA) பண்ணைக்குப் பதில் முகாமையாளர் தேவை. க.பொ.த. உயர்தரம் (A/L) சித்திபெற்ற இரண்டு வருட தொழில் அனுபவம் உடைய விண்ணப்பதாரிகள் 20.06.2023 திகதிக்கு முன்னதாக பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு சுயவிபரங்களை அனுப்பி வைக்கவும்.

srilankaymca@eureka.lk
071 315 4912 / 071 451 8373

(22385)AH-1

### English Language Speaking (Proficiency) IELTS

உங்கள் தன்னம்பிக்கையை வளர்த்துக்கொள்ள மிக சுலபமான முறையில் ஆங்கிலப் பேச்சு வன்மை மற்றும் IELTS வகுப்புக்கள் ஆரம்பம்

21.06.2023 - புதன்கிழமை
இடம் :- 439, கோவில் வீதி, நல்லூர்.
spraj54@gmail.com online மூலமாகவும் பயிலலாம்.
077 768 7821

### விஸ்டம் தொழில்நுட்பக் கல்லூரி

## A/L 2025

ஆரம்பம் : 18.06.2023 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : காலை : 9.30 Am
அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்
இல. 63, சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 077 288 7774

### TECHNO WORLD

தொழில்நுட்பக் கல்லூரி
வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்

A / L தொழில்நுட்ப பிரிவு
புதிய கல்வியாண்டு
A/L 2025

- திகதி - 18.06.2023 (ஞாயிற்றுக்கிழமை)
- நேரம் - காலை - 8.30

(தேசிய, மாவட்ட ரீதியில் 5 ஆவது முறையாகவும் 98 மாணவர்கள் பல்கலைக்கழகதெரிவு)
(வேறு எங்கும் கிளைகள் கிடையாது)

தொடர்புகளுக்கு : 077 017 5346

(cs 25212) (N-1)

### பணியாளர்கள் உடன் தேவை

பாதுகாவலர் (அரச சார்பற்ற நிறுவனங்களில் வேலை செய்த அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. வயது எல்லை 21-50)

கனரக வாகன ஓட்டுனர் - யாழ் - கொழும்பு (வயது எல்லை 25-55) முன் அனுபவம் அவசியமானதாகும்.

நேரில் சமுகமளிக்க :- 195, Temple Road, Nallur, Jaffna.

தொடர்புகளுக்கு:- 077 8729806, 077 251 4986

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கல்வியங்காட்டில் 4 பரப்புக் காணி விற்பனைக்கு.

- * கல்வியங்காட்டு சந்தியில் இருந்து 1 1/2 km தூரத்தில் பருத்தித்துறை வீதியில் இருந்து 1200 m தூரம் (இலங்கை நாயகி அம்மன் கோயில் முன் வீதி).
- * கல்வியங்காடு புதிய செம்மணி வீதியில் மடத்தடியில்.
- * இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன் குடியிருப்புக்கள் சூழ உள்ள காணி.
- * ஒரு பரப்பின் விலை இரண்டு இலட்சத்தி ஐம்பது ஆயிரம் ரூபாய் (250,000/=) மட்டும்.

தொடர்பு: 076 739 0413
076 436 5814

### காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் 33 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- * பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்.
- * புத்தூரில் தண்ணீர் தாங்கி அருகாமை (நிலப்பரப்பு)
- * மூன்று பரப்பாகவும் இரண்டரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.
- * வியாபார நிலையங்கள் திருமண மண்டபங்கள் வீடு அமைப்பதற்கு உகந்த இடம்.
- * ஒரு பரப்பின் விலை 250,000/= (இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம்)
- * பார்வையிடும் நேரம் காலை 06 மணிமுதல் மாலை 06 மணிவரை.
- * நன்னீரூற்று.

தொடர்பு: 076 7336 047
076 7558 606

### மரண அறிவித்தல்



தோற்றம் 08 . 06 . 1954 — மறைவு 13 . 06 . 2023

**திரு. சண்முகம் அருள்நாதன் (NMS அருள்நாதன்)**

(முன்னாள் பங்காளர் - K. D. L. Rice Agency,
உரிமையாளர் - Priya Traders தெனியாய)

யாழ் வேலணை மேற்கை பிறப்பிடமாகவும், கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட திரு. சண்முகம் அருள்நாதன் (NMS அருள்நாதன்) (முன்னாள் பங்காளர் K. D. L. Rice Agency, உரிமையாளர் Priya Traders தெனியாய) கடந்த (13-06-2023) செவ்வாய்க் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நா.மு.சண்முகம் (பிரபல தெனியாய வர்த்தகர் NMS) பகவதி தம்பதிகளின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான தியாகராஜா இராசலெட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும், கலாவல்லி அவர்களின் ஆருயிர்க் கணவரும், செல்வநாதன், மதிநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், தனுஜா, பிரியா, சதீஸ், கிரிஜா ,சுபனா, அனுதீபா ஆகியோரின் அருமைத் தந்தையும், காசிபன், அச்சுதநாத், ராஜிகா, ராஜபவன், சுதர்ஷனன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அஷ்வின், கோதை, வாசகி, துளசி, அபூர்வா, தேனவன், பல்லவி, ஆருஜன், அபிதன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற சிவானந்தசோதி, திலகவதி, துஷாயினி, ரூபினி ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற கேதாரநாதனின் சகலனும் தனலட்சுமி அவர்களின் உடன்பிறவாச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (18.06.2023) ஞாயிற்றுக்கிழமை மு.ப 09.00 மணி முதல் பொரளை ஜெயரட்னை மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இறுதிக்கிரியைகள் நண்பகல் 12.00 மணியளவில் இடம்பெற்று பின்னர் பூதவுடல் பொரளை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்.

078 538 5324 (CS/50858)AH-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 — விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.06.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.